Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JANUARY 12, 2023

வியாழக்கிழமை ஜனவரி 12, 2023 | ஒளி: 08 கதிர்: 185 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

கோட்டா, மஹிந்தவுக்கு விதிக்கப்பட்ட தடைக்கு

# கனடாவை அழைத்து வருத்தம் தெரிவிப்பு

## புலம்பெயர் தமிழர்களை மகிழ்விக்கும் முயற்சி என்கிறார் சப்ரி



மனித உரிமைகள் மீறல் என்ற பெயரில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக கனடிய அரசாங்கம் விதித்துள்ள பொருளாதார தடைகள் தொடர்பில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி, கனடிய பதில் உயர்ஸ்தானிகரை அழைத்து, தமது கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

புலமைப்பரிசில் பரீட்சை

## பெறுபேறுகள் இறுதியில் வரும்

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகவும், ஆகவே பரீட்சை பெறுபேறுகளை இம்மாத இறுதிக்குள் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தரம் 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை 2022 டிசெம்பர் 18 ஆம் திகதி நடைபெற்றது. இந்தப் பரீட்சைகள் 2,894 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றதுடன், இத்தேர்வுக்கு மூன்று இலட்சத்து 34,698 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உரங்களை விற்றே ஊதியம் வழங்கினோம்

யூரியா உரங்கள் மற்றும் ஏனைய உரங்களை விற்பனை செய்ததன் மூலம், விவசாய அபிவிருத்தி திணைக்களம் கடந்த ஆண்டு பருவ காலத்திலும் இந்த வருட மகா பருவத்திலும் 10.05 பில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்டியுள்ளது. இந்தப் பணம் திறைசேரிக்கு அனுப்பப்பட்டதுடன், டிசெம்பர் மாதம் அந்தப் பணத்தில் ஒரு பகுதியை அரச ஊழியர்களுக்கு உரிய சம்பளம் வழங்க அரசாங்கம் பயன்படுத்த வேண்டியிருந்தது என விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



விவசாய அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இந்த விடயத்தை வெளிப்படுத்தினார்.

தொடர்ச்சி P2

சின்னத் தேர்தல் விவகாரம்

## 'கட்டுப்பணம் ஏற்க வேண்டாம்' என்ற கடிதத்துக்கு எதிராக மனு

உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போட்டியிடவுள்ள வேட்பாளர்களிடம் மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை கட்டுப்பணம் பெறக்கூடாது என்று மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என்ற தீர்மானத்தை இரத்து செய்யுமாறு உத்தரவிடக்கோரும் ரிட் மனுவை, ஐக்கிய மக்கள் சக்தி, உயர்நீதிமன்றத்தில் புதன்கிழமை (11) தாக்கல் செய்தது.

2023 ஜனவரி 10 ஆம் திகதி, பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் நீல் ஹபுகின்னவால், வெளியிடப்பட்ட கடிதத்தை இரத்துச் செய்து உத்தரவு பிறப்பிக்குமாறும் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 10% கனரக சாரதிகள் போதையில் தள்ளாட்டம்

நாட்டிலுள்ள கனரக வாகன சாரதிகளில் சுமார் 10% மானோர் மதுபோதையில் வாகனங்களை ஓட்டிச் செல்வது கண்டறியப்பட்டுள்ளது என்று தெரிவித்த தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் தலைவர் டொக்டர் சவேந்திர கமகே, சிலர் போதைப்பொருளைப் பயன்படுத்துவதாக தெரியவந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கனரக வாகன சாரதிகளில் பெரும்பாலானோர் 20 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் நடுத்தர அளவில் வருமானம் ஈட்டுபவர்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

## கோட்டா, மஹிந்தவுக்கு கனடா பொருளாதாரத் தடை

### இந்தப் பட்டியலில் இராணுவ அதிகாரிகள் இருவரும் உள்ளடக்கம்

1983ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது, மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ உட்பட நான்கு அரச அதிகாரிகள் மீது கனடா தடைகளை விதித்துள்ளது.




இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான மொத்த மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டதற்காக, மஹிந்த, கோட்டாபய ராஜபக்ஷ மீது கனடா சிறப்பு பொருளாதார நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ், தடைகளை விதித்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி அறிவித்துள்ளார்.

கனடிய வெளிவிவகார அமைச்சால் செவ்வாய்க்கிழமை (10) வெளியிடப்பட்ட அறிக்கையில், இலங்கையின் இரண்டு முன்னாள் ஜனாதிபதிகள், ஸ்டாஃப் சார்ஜென்ட் சுனில் ரத்நாயக்க, லெப்டினன்ட் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகியோர் மீது தடைகளை விதிப்பதாக கனடா அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## 26 புனித தலங்களின் விவரம் வர்த்தமானியில் வெளிவரும்

26 புனித தலங்களை வர்த்தமானியில் இந்த ஆண்டு வெளியிட திட்டமிட்டுள்ளதாக தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.




அதன்படி, திஸ்ஸவ ரஜ மகா விஹாரை, வெல்கம் வெஹெர ரஜ மகா, மஹாசென் ரஜ மகா, பியகம சுதர்மாராம மகா, கம்பலேவ அம்பெவ ஸ்ரீ சுதர்மாராமய, பிலாகட்டுமுல்லை ஸ்ரீ புஷ்பராம புராண, கிரிமதியான ஸ்ரீ சுதம்மவங்ஷாராம ரஜமஹா, கப்பின்ன மகா, மாகல்ல கச்சிவத்த புராண ராஜ மகா, புத்தியாகம சீகல ராஜ மகா, கங்கொடவில ஸ்ரீ விஜயராம, இரத்மலானை புஷ்பாராமய,

தொடர்ச்சி P2

## வெளிநாடு செல்ல மஹிந்தவுக்கு அனுமதி

மே 9ஆம் திகதி அலரிமாளிகை மற்றும் காலி முகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் குறித்த வழக்கில், சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளிநாடு செல்வதற்கு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, புதன்கிழமை (11) அனுமதி வழங்கினார்.

ஜனவரி 20ஆம் திகதி முதல் ஜனவரி 31ஆம் திகதி வரை முன்னாள் பிரதமர் மஹிந்த, வெளிநாடு செல்லவதற்கு அனுமதி கோரியுள்ளதாகவும் சட்டமா அதிபர் அதற்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உட்பட 17 பேருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னியாராச்சி, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சஞ்ஜீவ எதிரிமான்ன, காஞ்சன ஜயரத்ன, நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்தன,

தொடர்ச்சி P2

மைத்திரியின் முன்னாள் பிரதானி

## மஹாநாம மற்றும் பியதாஸவுக்கு கடூழிய சிறைத்தண்டனை உறுதி

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்னாள் பணிக்குழாம் பிரதானி ஐ.எச்.கே. மஹாநாம, அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பியதாஸ திஸாநாயக்க ஆகியோருக்கு விதிக்கப்பட்ட 20 வருட கடூழிய சிறை தண்டனை மற்றும் 12 வருட சிறை தண்டனையை உயர்நீதிமன்றம், புதன்கிழமை (11) உறுதி செய்ததது.

நீதியரசர்களான விஜித் கே.மலல்கொட, எல்.டி.பி. தெஹிதெனிய, ப்ரீத்தி பத்மன் சூரசேன, எஸ்.துரைராஜா, யசந்த கோதாகொட ஆகிய ஐவரடங்கிய குழாம், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் அதிகாரிகள் விசாரணை நடத்திய விதத்தில், சட்டவிரோதமோ அதிகார துஷ்பிரயோகமோ இடம்பெறவில்லை என்று அறிவித்தது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதிக்கு அமெரிக்கா பாராட்டு



நாட்டின் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள சாதகமான நடவடிக்கைகளுக்கு அமெரிக்க அரசாங்கத்தின் பாராட்டுகளை ஐலின் லொவபக்கர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தேசிய பாதுகாப்புச் சபையின் தெற்காசியப் பிரிவின் சிரேஷ்ட பணிப்பாளர் ரியர் அட்மிரல் திருமதி ஐலின் லொவபக்கர், புதன்கிழமை (11) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள சாதகமான நடவடிக்கைகளுக்கு அமெரிக்க அரசாங்கத்தின் பாராட்டுகளை ஐலின் லொவபக்கர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பாராளுமன்றத்தினதும் பாராளுமன்ற உறுப்பினர்களதும்

## ஜனநாயகம், பாதுகாப்புக்கு பொதுநலவாய அமைப்பு உதவும்

பாராளுமன்றத்தினதும் பாராளுமன்ற உறுப்பினர்களதும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பையும் வலுப்படுத்த பொதுநலவாய அமைப்பு உதவும் என பொதுநலவாய பாராளுமன்ற அமைப்பின் பொதுச் செயலாளர் ஸ்டீபன் ட்விக்ஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## விசேட அறிவித்தல்

ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து நாடு திரும்ப முடியாத நிலையில் உள்ள இலங்கையர்களுக்கு அபுதாபியில் உள்ள இலங்கை தூதரகம் விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

சுற்றுலா விசா மூலம் ஐக்கிய அரபு அமீரகத்துக்குச் சென்றுள்ள இலங்கையர்கள், மற்றும் விசா இரத்து செய்யப்பட்டு நாடு திரும்ப முடியாத நிலையில் உள்ளவர்கள், அபுதாபியில் உள்ள இலங்கை தூதரகத்தை +971 263 16444 அல்லது +971 263 46481 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு, தகவல்களை பதிவு செய்யுமாறு தூதரகம் தெரிவித்துள்ளது.

வரி திருத்தத்துக்கு எதிராக

## 15 ஆயிரம் கையொப்பங்கள் அடங்கிய மகஜர் கையளிப்பு

### 23 முதல் கறுப்பு வாரம் பிரகடனம்

சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட வரி திருத்தங்களுக்கு எதிராக 15 ஆயிரம் வைத்தியர்களின் கையொப்பங்கள் அடங்கிய மகஜரொன்றை ஜனாதிபதி செயலகத்தில் கையளித்த அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம், ஜனவரி 23 ஆம் திகதி ஆரம்பிக்கும் வாரம் கறுப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தது.

தொடர்ச்சி P2

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி

## 2023 இலும் வீழ்ச்சியடையும்

இலங்கையின் அதிகாரிகள் ஸ்திரப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதேவேளை உணவு, மருந்து, எரிபொருள் தட்டுப்பாடுகளை மக்கள் எதிர்நோக்குவது குறித்து உலக வங்கி கவலை வெளியிட்டுள்ளது. அத்துடன், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த வருடம் 4.3 சதவீதத்தால் வீழ்ச்சியடையும் எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.




2023ஆம் ஆண்டுக்கான உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் தொடர்பான அறிக்கையிலேயே உலக வங்கி இதனை குறிப்பிட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நாட்டில் உணவு மற்றும் எரிபொருளுக்கு செலுத்துவதற்கான அந்நிய செலாவணி இல்லாமல் போனமையும், அதேபோல் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையாலும் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தன.

இதன் காரணமாக, இலங்கையின் உற்பத்தியானது 2022 ஆம் ஆண்டில் 9.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என மதிப்பிடப்படுகின்றது. நெருக்கடி மற்றும் அதன் விளைவுகள், வறுமையை அதிகரித்துள்ளதுடன் கடந்த தசாப்த காலத்தில் பெறப்பட்ட பலாபலன்களை இல்லாமல் செய்துள்ளன எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கனடாவை அழைத்து வருத்தம் தெரிவிப்பு

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ மீது கனேடிய அரசாங்கம் தடைகளை விதித்துள்ளமை தொடர்பில் விசாரிப்பதற்காக, இலங்கைக்கான கனேடிய பதில் உயர்ஸ்தானிகர் வெளிவிவகார அமைச்சுக்கு நேற்று (11) காலை அழைக்கப்பட்டிருந்தார்.

1983 மற்றும் 2009க்கு இடையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்காக இலங்கையின் இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க, லெப்டினன்ட் கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகியோர் மீது கனடா அரசாங்கம் தடைகளை விதித்துள்ளது. இது குறித்து கலந்துரையாடவே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கனேடிய பதில் உயர்ஸ்தானிகரை அழைத்திருந்தார்.

இலங்கை தற்போது முகங்கொடுத்துவரும் நெருக்கடி நிலைமைகளில் கனடா அரசாங்கம் இவ்வாறு செயற்படுவது இருதரப்பு நட்புறவில் தாக்கத்தை செலுத்தும் என அமைச்சர் கூறியுள்ளதுடன்,அடிப்படைவாத தமிழ் புலம்பெயர் அமைப்புகளை மகிழ்விக்க எடுக்கப்பட்ட தீர்மானம் இதுவெனவும் இதன்போது அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## உரங்களை விற்றே ஊதியம் வழங்கினோம்

கடந்த இடைக்கால வரவு -செலவுத் திட்டத்தில் அமைச்சுக்களின் செயற்பாடுகளுக்காக அரசாங்கம் குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்கிய போதிலும், பொருளாதார நெருக்கடி காரணமாக முழுப் பணத்தையும் வழங்க முடியவில்லை என்றார்.

2023 ஆம் ஆண்டுக்கான விவசாய அமைச்சுக்கு 115 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், பொருளாதார நெருக்கடி காரணமாக அமைச்சுகளுக்கு வழங்கப்பட வேண்டிய பணத்தில் 5 சதவீதத்தை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், அடுத்த வார இறுதிக்குள் இந்த பருவத்தின் நெல் அறுவடை சில பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதால், நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு நெல்லை கொள்வனவு செய்வதற்கு குறைந்தது 10 பில்லியன் ரூபாய் தேவைப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். அதற்கான பணத்தைக் கோரி அமைச்சரவையில் அமைச்சுப் பத்திரம் சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கட்டுப்பணம் ஏற்க வேண்டாம் என்ற கடிதத்துக்கு எதிராக மனு

குறித்த மனுவில், அமைச்சரவை செயலாளர், பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன, பிரதமர் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா மற்றும் சட்டமா அதிபர் உட்பட 85 பேர். பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் வேட்பாளர்களிடமிருந்து கட்டுப்பணத்தை ஏற்க வேண்டாம் என்ற அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு பொது நிர்வாக அமைச்சின் செயலாளரால் அறிவிக்கப்பட்டது.

வர்த்தமானி அறிவித்தல்களுக்கு அமமைம நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடுவதற்குத் தகுதிபெறும் வகையில் கட்டுப் பணத்தை வைப்பிலிடுவதற்கு தனது கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்து வருவதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த கடிதத்தின்படி செயற்படுவதைத் தவிர்க்குமாறு தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் கடிதத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## 10% கனரக சாரதிகள்...

மேலும், கனரக வாகன சாரதிகள் மட்டுமின்றி, பஸ் சாரதிகளும் மதுபோதைக்கு அடிமையானவர்களா என்பதை கண்டறிய சிறுநீர் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் அவர்களை பரிசோதிக்கும் முன்னோடித் திட்டம் கடந்த ஆண்டில் நடத்தப்பட்டு தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

திட்டத்தைத் தொடர்வது நிறுவகத்தின் நோக்கமாக இருந்த போதும் அதற்காகத் தேவைப்படும் நிதி போதுமானதாக இல்லை என்றும் தெரிவித்தார்.

## கோட்டா, மஹிந்தவுக்கு கனடா பொருளாதார தடை

மனித உரிமை மீறல்களை செய்ததாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் தடைவிதிப்பட்டவர்களுடன் கனேடிய குடியுரிமையுள்ளவர்கள் கனடாவுக்கு உள்ளே அல்லது வெளியே எந்தவொரு நிதி பொருளதாதார மற்றும் சொத்துகள் தொடர்பான தொடர்புகளை பேணுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. தடைவிதிக்கப்பட்ட வர்களுக்கு, கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கனடாவுக்குள் உள்நுழைவதற்குரிய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட நால்வருக்கு எதிரான தடை, சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் பொறுப்புக் கூறப்படுவார்கள் என்பதற்கான தெளிவான அறிகுறி என கனடா பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார் இந்த நான்கு இலங்கை அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக கனடா அரசாங்கம் விதித்துள்ள தடைகள், இலங்கையில் பொறுப்புக்கூறலுக்கான முக்கியமான அடுத்த படியாகும்.

இதுவரை, இரண்டு ராஜபக்ஷ சகோதரர்களும் இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு எதிராக அவர்கள் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட பல போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு எந்தப் பொறுப்பும் சொல்லாமல் இருந்து வருகின்றனர்.கனடா விதித்துள்ள பொருளாதாரத் தடைகள், சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் பொறுப்புக் கூறப்படுவார்கள் என்பதற்கான அறிகுறி எனவும் தெரிவித்துள்ளார்.

## 26 புனித தலங்களின் விவரம்

அஸ்கிரிய புராண ரஜ மகா, பொத்துவில் கடல் மகா, மஹாசென் ரஜ மகா, புத்துருவயாய ரஜமஹா, வரலாற்று புராதனமான ஹபரன தம்பிட்ட, சோமாவதிய ரஜமஹா, கந்தேகம தனஞ்ஜய ரஜ மஹா, கந்தேகம நாமலுவ சிங்ககிரி ராஜ மகா, பிபில வரலாற்று புகழ்மிக்க பியங்கல ரஜமஹா, மாணியம்கம ரஜமகா ஆகிய விஹாரைகள் வெளியிடப்படவுள்ளன.

அத்துடன், மெதகொட சித்த பத்தினி ஆலயம், பெபிலியான சுனேத்ரா மகாதேவி பிரிவேன, மதுராவெல பல்லபிட்டிய வித்யாசேகர பிரிவேனா ஆகியனவும் புனித தலங்களாக வர்த்தமானியில் வெளியிடப்பட உள்ளன.

கடந்த ஆண்டில் 16 புனித தலங்களின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 101 புனித தலங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. 1961 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி கதிர்காமம் இலங்கையின் முதல் புனித பூமியாக அறிவிக்கப்பட்டு கடந்த மாதம் 23ம் திகதி நாட்டில் 101 ஆவது புனித பூமியாக மஹியங்கனை ரஜமகா விஹாரை வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.

புனித தலங்களை அறிவிக்கும் போது 03 அளவுகோல்களின்படி அது செய்யப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டினார். தேசிய, பிராந்திய மற்றும் உள்ளூர் ரீதியாக முக்கியமான இடங்கள் இப்படி தேர்ந்தெடுக்கப்படுகின்றன. புனித தலங்களாக வர்த்தமானியில் வெளியிடப்படும் போது தொல்பொருளியல் திணைக்களமும் அத்துடன் புத்தசாசன அமைச்சின் அங்கிகாரம் மற்றும் நில அளவை வரைபடம் அவசியம் என்று தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம் கூறுகிறது.

## வெளிநாடு செல்ல மஹிந்தவுக்கு அனுமதி

சி.பி.ரத்னாயக்க, சம்பத் அத்துகோரள, ரேணுக பெரேரா, சனத் நிஷாந்த, மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோன் உள்ளிட்ட 17 பேருக்கு எதிராக இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அலரிமாளிகைக்கு அருகில் இருந்த மைனாகோகம மற்றும் காலி முகத்திடல் கோட்டாகோகம போராட்டக்காரர்கள் மீது குண்டர்களால் தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் கோட்டை நீதவான் நீதிமன்றில் நீதவான் விசாரணை இடம்பற்றது.

அதன்போது, தாக்குதல்களை நடத்துவதற்கான சதி மற்றும் திட்டமிடலுடன் தொடர்பிருக்கலாமென எண்ணுவதால், அவர்கள் நாட்டில் தங்கியிருக்க வேண்டுமென தெரிவித்து சட்டமா அதிபர் கருதுவதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகியிஜருந்த மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் அயுஷா ஜினசேன மன்றில் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த கோட்டை நீதவான் திலின கமகே இந்த பயணத்தடை உத்தரவை பிறப்பித்திருந்தார்.

## ஜனநாயகம், பாதுகாப்புக்கு...

அலரி மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை புதன்கிழமை (11) சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான அண்மைய வன்முறைச் செயல்கள் குறித்து தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்திய அவர், இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களின் ஜனநாயகம் மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்த பொதுநலவாய பாராளுமன்ற அமைப்பு ஆதரவளிக்கும் என்று கூறினார்.

இலங்கையில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற ஊழியர்களுக்கான பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் பயிற்சித் திட்டங்களை உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களை உள்ளடக்கியதாக விரிவுபடுத்துமாறு பிரதமர் முன்வைத்த கோரிக்கையை சாதகமாக பரிசீலிப்பதற்கும் அவர் இணக்கம் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் குறுகிய காலத்துக்கு கிராமப்புறங்களுக்குச் சென்று கிராமிய பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்க உதவுவதற்காக இங்கிலாந்தில் வதிவிடப் பயிற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஆதரவளிக்குமாறும் பிரதமர் கேட்டுக் கொண்டார். . ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இலங்கையில் காலநிலை மாற்ற பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான முன்மொழிவு குறித்து அவர் தூதுக்குழுவிற்கு விளக்கியதுடன், பொதுநலவாய அமைப்பின் உத்தியோகபூர்வ சாசனத்தின் கீழ் முன்மொழியப்பட்ட பல்கலைக்கழகத்திற்கு எவ்வாறு ஆதரவளிப்பது என்பது குறித்து ஆராய்வதாகவும் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

## மஹாநாம மற்றும் பியதாஸவுக்கு கடூழிய சிறைத்தண்டனை உறுதி

2 கோடி ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட இருவருக்கும் 2019ஆம் ஆண்டு டிசெம்பர் 19ஆம் திகதியன்று கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

> அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்த திஸாநாயக்கவுக்கு 12 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் 55,000 ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

கந்தளாய் சீனி தொழிற்சாலையில் முதலிட வந்திருந்த இந்திய தொழிலதிபரும் முதலீட்டாளருமான நாகராஜா என்பவரிடம் மஹநாம மற்றும் திஸாநாயக்க ஆகியோர் 10 கோடி ரூபாய் இலஞ்சம் கோரியுள்ளனர்.

அதன் ஒரு பகுதியான 2 கோடி ரூபாயை 2018ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி பெற்றுக்கொண்ட போது, இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

116 ஆவணங்கள், 22 சாட்சியங்களை முன்னிலைப்படுத்தி ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை 3 மாதங்கள் விசாரித்த நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் மஹாநாமவுக்கு 20 வருட கடூழிய சிறைத்தண்டனையும் 65,000 ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது.

கைதுசெய்யப்பட்ட போது அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்த திஸாநாயக்கவுக்கு 12 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் 55,000 ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேற்குறிப்பிட்ட இருவராலும் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்ட போதே மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பை உயர்நீதிமன்றம் உறுதிசெய்தது.

## ஜனாதிபதிக்கு அமெரிக்கா பாராட்டு

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பொருளாதாரத் திட்டங்கள் குறித்து லொவபக்கருக்கு விளக்கமளித்த ஜனாதிபதி, போதைப்பொருள் கடத்தலை தடுப்பது மற்றும் அந்த நோக்கத்திற்காக கடல்சார் ஒத்துழைப்பைப் பெறுவது தொடர்பிலும் கலந்துரையாடினார்.

இலங்கையின் கூட்டிணைவை அமெரிக்கா பாராட்டுகின்ற அதேவேளை, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த ஆவலுடன் இருப்பதாகவும் திருமதி லொவபக்கர் இங்கு மேலும் குறிப்பிட்டார்.

## 2023 இஹும் வீழ்ச்சியடையும்

அத்துடன், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த வருடம் 4.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடையும் எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது

தொடரும் அந்நியசெலாவணி பிரச்சினைகள் உயர் பணவீக்கத்தின் தாக்கம் முக்கிய வர்த்தக சகாக்களின் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சி காரணமாக 2023ஆம் ஆண்டு குறித்து முன்னர் எதிர்வுகூறப்பட்டவற்றை மாற்றவேண்டிய நிலையேற்பட்டுள்ளது என உலக வங்கி தெரிவித்துள்ளது

தென்னாசியா குறித்து தெரிவித்துள்ள உலக வங்கி உக்ரைன் யுத்தத்தின் தாக்கங்களை இந்த பிராந்தியம் தொடந்தும் அதிகரிக்கின்றது என தெரிவித்துள்ளது. தென்னாசிய பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சி 2023 இல் 5.3 சதவீதமாக காணப்படும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

## 15 ஆயிரம் கையொப்பங்கள் அடங்கிய மகஜர் கையளிப்பு

சங்கத்தினால் குறித்த மகஜர், புதன்கிழமை (11) ஜனாதிபதி செயலத்தில் கையளிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டொக்டர் சமில் விஜேசிங்க அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வைத்தியர்கள் இந்த மனுவில் கையொப்பமிட்டதாக குறிப்பிட்டார்.

புதிய வரித் திருத்தங்களுக்கு எதிராக வைத்தியர்கள், வல்லுநர்கள் மற்றும் பல சங்கங்கள் ஏற்கெனவே போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளதாகவும் தற்போதைய வரித் திருத்தங்களை இரத்து செய்து, அனைவருக்கும் நியாயமான வரிக் கொள்கையை முன்வைக்குமாறு சங்கம் அதிகாரிகளிடம் கோருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்தின் வரிக் கொள்கைகளுக்கு எதிராக பாரிய அளவிலான எதிர்ப்புப் பிரச்சாரத்தை ஏற்பாடு செய்யவுள்ளதாகவும் ஜனவரி 23 ஆம் திகதி ஆரம்பிக்கும் வாரம் கறுப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

வரிக் கொள்கைகளின் தீமைகளை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் பல தடவைகள் சுட்டிக் காட்டியுள்ளதாகத் தெரிவித்த அவர், எனினும் அரசாங்கம் அதனைப் புறக்கணித்துள்ளது என்றார்.

மூன்று

# புதிய தூதுவர்களை நியமிக்க அனுமதி

மூன்று புதிய தூதுவர்களை நியமிப்பதற்கு பாராளுமன்ற உயர்பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி அண்மையில் வழங்கப்பட்டதாக பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

இதற்கமைய லெபனான் குடியரசின் புதிய இலங்கை தூதுவராக கபில சுசந்த ஜயவீரவை நியமிப்பதற்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி கிடைத்துள்ளது. அத்துடன், பஹ்ரேய்ன் இராச்சியத்துக்கான புதிய இலங்கை தூதுவராக எச்.எம். ஜீ.ஆர்.ஆர்.கே விஜயரத்ன மென்டிஸை நியமிப்பதற்கும், எத்தியோப்பிய கூட்டாட்சி ஜனநாயகக் குடியரசின் புதிய இலங்கை தூதுவராகவும், ஆபிரிக்க ஒன்றியத்துக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகவும் கே.கே.தெஷாந்த குமாரசிறி ஆகியோரை நியமிப்பதற்கும் பாராளுமன்ற உயர்பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக பதில் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் அண்மையில் (05) பாராளுமன்றத்தில் கூடியது. இதில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வல்ல, பாராளுமன்ற உறுப்பினர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, சுதர்ஷனி பெர்ணான்டோபுள்ளே, விஜித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஹிஸ்புல்லாஹ்வின்

# மீள்இணைவு கட்சியை வலுப்படுத்தும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் மீண்டும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் இணைந்திருப்பது கட்சி ஆதரவாளர்கள் எல்லோருக்கும் நல்ல உற்சாகத்தை தந்திருக்கிறது என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் இணைந்து கொண்ட நிகழ்வு, செவ்வாய்க்கிழமை (10) ஓட்டமாவடி, காவத்தமுனையில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.




அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், ஹிஸ்புல்லாஹ்வின் மீள் இணைவு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்னும் பலமடங்கு வெற்றிகளை ஈட்டுவதற்கான ஒரு நல்ல ஆரம்பமாக அமைகிறது. அத்தோடு, எந்தக் கட்சிகளிடமிருந்தும் அல்லது சுயேட்சைக் குழுக்களிடமிருந்தும் கட்டுப்பணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்ற அறிவுறுத்தல் இன்றைய தினம் வெளிவந்துள்ளமை எங்களைப் பொறுத்தமட்டில் முற்றிலும் சட்ட விரோதமான விடயமாகவுள்ளது.

எதிர்வரும் தேர்தலை மிகவும் ஆர்வத்தோடு எதிர்பார்த்து அதற்கான ஆயத்த வேலைகளில் ஈடுபட்ட அனைத்து ஜனநாயக சக்திகளுக்கும் மிகப்பெரிய ஏமாற்றமாக அமைந்திருக்கிறது என்பதை முதலில் நாங்கள் சொல்லியாக வேண்டும்.

இந்த நாட்டின் ஜனநாயகத்தை குழிதோண்டி புதைப்பதற்காக வங்குரோத்து நிலைக்கு வந்திருக்கும் அரசாங்கத்தின் மிக மோசமான நடவடிக்கையை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். இது தொடர்பாக ஏனைய கட்சி தலைவர்களோடு இணைந்து பலத்த கண்டனத்தையும், எதிர்ப்பையும் நாங்கள் தெரிவிக்க இருக்கிறோம்.

உடனடியாக அரசு இவ்வாறான நடவடிக்கைகளில் இருந்து விடுபடவேண்டும். அதை மீளப்பெற வேண்டும் என்று நாங்கள் அழுத்தம் செலுத்த விரும்புகிறோம். குறிப்பாக அமைச்சரவைப் பத்திரத்தில் என்ன காரணங்களை முன்னிட்டு இவ்வாறான ஒரு நடவடிக்கையை அரசாங்கம் எடுத்து இருக்கிறது என்பது சம்பந்தமாக ஒரு விளக்கத்தை பெற்றுக் கொள்ள விரும்புகிறோம். அதேநேரம் அது எவ்வாறாக இருந்தாலும் கூட கடந்த ஒருசில வாரங்களாக ஜனாதிபதி உட்பட ஆளும் தரப்பு முக்கியஸ்தர்கள் இந்த விவகாரம் சம்பந்தமாக சொல்லி வந்த செய்திகள் இந்த நடவடிக்கைகள் மூலம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டு இருக்கிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# போதை மாத்திரைகளுடன் பெண் கைது

செந்தூரன் பிரதீபன்

புண்ணாலை கட்டுவன் வடக்கு பகுதியில் போதை மாத்திரைகளை விற்பனை செய்யத் தயாராக இருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட பெண் 25 வயது உடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, 40 போதை



மாத்திரை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் அச்சுவேலி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# ஊர்வலத்துடன் நிறைவடைந்த கவனயீர்ப்பு போராட்டம்





வி.ரி. சகாதேவராஜா

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் ஒன்றிணைய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, கடந்த ஆறு நாள்களாக இடம் பெற்றுவந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் (10) கல்முனை, பாண்டிருப்பில் ஊர்வலத்துடன் நிறைவடைந்தது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழு, இக் கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தியது. ஒருமித்த குரலை உரக்கச் செல்வோம் என்ற அடிப்படையில், வரலாற்று பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்தின் முன்பாக இப்போராட்டம் காலை 10 மணி முதல் 3 மணி வரை நடைபெற்று வந்தது. போராட்டத்தில் பல அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

இறுதிநாளில், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், சமய தலைவர்களான சிவசிறி பத்மநிலோஜன் குருக்கள், அருட்தந்தை ஜேசுதாசன் அடிகளார் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

அத்துடன் சிவில் அமைப்புகள், பாதிக்கப்பட்ட மக்கள், ஊடகவியலாளர்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் என்று பலரும் கலந்து கொண்டதுடன், அவர்கள் ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் பதாகைகளை ஏந்தி, அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.



# இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடல்

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை, மீட்சி மற்றும் நல்லிணக்க வேலைத்திட்டம் குறித்து அரசாங்கம் கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்துள்ளது. இது தொடர்பான கூட்டம் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையில் நடைபெற்றது. நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்தனர்.

# ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் உபதலைவரும், ஊவா மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான வேலாயுதம் ருத்திரதீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், கோப்பி யுகத்துடனேயே மலையக மக்களின் இலங்கை வருகை ஆரம்பமானது. அவ்வாறு எமது மக்கள் வருகை தந்து இவ்வருடத்துடன் 200 வருடங்களாகின்றன. இலங்கையின் பொருளாதாரத்துக்கு எமது மக்கள் பெரும் பங்களிப்பு வழங்கினர். நாட்டின் மேம்பாட்டுக்கு உந்து சக்தியாக இருந்தனர். இலங்கையின் பெயரை சர்வதேச மயப்படுத்தினர்.

இந்நிலையில் மலையக மக்களின் பங்களிப்பை பாராட்டி, அவர்களை கௌரவிப்பதற்காக விழா நடத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். இதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது. இதனையொட்டி ஒரு தேயிலை தொழிலாளியின் பிள்ளை என்ற வகையில் நான் பெருமைப்படுகின்றேன். எமது மக்களை கௌரவிப்பதற்கு தீர்மானித்த ஜனாதிபதிக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தற்போதைய சூழ்நிலையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தினால் அதற்கு பத்து பில்லியன் ரூபாய் வரை செலவாகும். மூன்று நாள்களில் இந்தப் பணத்தை அச்சிடமுடியும் என சிரேஷ்ட அரசியல்வாதி உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார். இதனை ஏற்கமுடியாது. கடன் வாங்குவதாலும், பணம் அச்சிடுவதாலும் நெருக்கடி நிலைமை மேலும் உக்கிரமடையும். கடன் வாங்கி இவ்வாறு செயற்பட்டதால்தான் நாடு இந்நிலைமையில் உள்ளது என்றார்.



# யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி மட்டக்களப்புக்கு விஜயம்

எம் எஸ் எம் நூர்தீன்

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியமான யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி நவரூப ரஞ்சினி முகுந்தன் தலைமையிலான பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வருடம் (2022) ஒக்டோபர் மாதத்திலிருந்து ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியமான யுனிசெப் அமைப்பால், முன்பள்ளிகளுக்கு அனுசரணை வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும், நிகழ்ச்சித்திட்டமான 'வறுமையால் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களின் போஷாக்கு மற்றும் வளர்ச்சி மட்டத்திற்குப் பாதிப்பு ஏற்படாது பேணுதல் தொடர்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் சுகாதாரத் துறை மற்றும் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள் தத்தம் பிராந்தியங்களில் மேற்கொள்ளும் செயற்பாடுகளின் நிலைப்பாடு தொடர்பாக விளக்கங்களை முன்வைத்தனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் சிறுவர்களின் போஷாக்கு, உளவள செயற்பாடுகள், போதைப்பொருட்களுக்கு எதிரான பாடசாலை மட்டச்செயற்பாடுகள் என்பன குறித்து மட்டக்களப்புப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் சமர்ப்பித்தார்.

பொருளாதார தளம்பல் காரணமாக மாவட்டத்தில் அதிகரித்துவரும் பாடசாலை இடைவிலகல், சிறுவர் துஷ்பிரயோகம், கிராமங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கான மாணவர்களின் புலம்பெயர்வு, மாணவர்களின் உளப் பாதிப்புகள், தாய்மார் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்தல் போன்றவை தொடர்பாக கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி உட்பட வைத்திய அதிகாரிகள், கல்வித்துறை உயர் அதிகாரிகள், யுனிசெப் அமைப்பின் உத்தியோகத்தர்கள், துறைசார் நிபுணர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# விழா மலரை பெறும் புரவலர் ஹாசிம் உமர்

உலகத் தமிழ் வம்சாவளி ஒன்பதாவது ஆண்டு மாநாடு சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற போது, விழா மலரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் பிரிவு ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவரும் இந்திய பாராளுமன்ற உறுப்பினர் தொல் திருமாவளவனிடமிருந்து பெறுவதையும் அருகில் விழா



தலைவர் ஜெ.செல்வகுமார், இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களான விக்னேஸ்வரன், ராதாகிருஷ்ணன், சுமந்திரன் ஆகியோர் உடன் காணப்படுகிறார்கள்.

# ஸ்டீபன் ட்விக்- அங்கஜன் சந்திப்பு



பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் (CPA) செயலாளர் நாயகம் ஸ்டீபன் ட்விக் நேற்று முன்தினம் (10) இரவு நாட்டை வந்தடைந்தார். செயலாளர் நாயகம் உள்ளிட்ட குழுவினரை பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் மற்றும் பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே. ஜயதிலக்க ஆகியோர் வரவேற்றனர்.

ஸ்டீபன் ட்விக்கின் இலங்கை விஜயத்தில் அவருடன் பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் மூலோபாய மற்றும் செயற்பாட்டுப் பிரதானி செல்வி எமில் டேவிஸ்ஸும் இணைந்திருந்தார். பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் செயலாளர் ஸ்டீபன் ட்விக்கின் இலங்கை விஜயத்தின் போது, ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

ஆய்வுகூடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின்

# மேலதிக நேர கொடுப்பனவு வழங்காதமையால்

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர்கள் சிரமம்

■ நிதர்சன் வினோத்



வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட வைத்தியசாலைகளில் பணியாற்றும் ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர்களின் (எம்.எல்.ரி.) மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படாமையால், அவர்கள் தங்கள் கடமைநேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் கடமையாற்றாமையால், நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளர் சி. ஹரிகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில், அவர் மேலும் கருத்துக் கூறியதாவது: வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஆய்வுகூட தொழில்நுட்ப வியலாளர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகளை, வடக்கு மாகாண அதிகாரிகள் வழங்க மறுப்பதன் காரணமாகவே, அவர்கள் தமது வேலைநாள்கள் தவிர்ந்த சனி, ஞாயிறு, விடுமுறை தினங்கள் மற்றும் பிற்பகல் நான்கு மணிக்குப் பின்னர் கடமையாற்றாது, தொழிற்சங்க நடவடிக்கையில் குதித்துள்ளார்கள்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் எட்டு ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் கடமையாற்ற வேண்டிய இடத்தில், தற்போது ஐந்து பேர் மட்டுமே கடமையாற்றுகின்றார்கள். இவர்களுக்கு கடந்த ஜூலை மாதத்துக்குப் பிறகு, மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. ஜனவரி ஐந்தாம் திகதியே அவர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

இதனால், சகல நோயாளர்களும் இலவச சேவையைப் பெறுவதாயின் யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்லவேண்டியுள்ளது. அங்குசென்று ஆய்வுகூட சேவையைப் பெறுவது நோயாளர்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது.

பொருளாதார நெருக்கடி, போக்குவரத்து சிக்கல் காரணமாக, எமது சங்கத்திடம் உதவிகேட்டு வருபவர்களுக்கு, நாம் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதனை நிலையத்தில் சேவையைப் பெற பண உதவி சங்கத்தின் நிதியிலிருந்து வழங்குகின்றோம். குறுகிய வருமானத்தை ஈட்டும் எமது சங்கத்தாலும் இவ்வாறு தொடர்ந்து வழங்கமுடியாத துர்ப்பாக்கிய நிலைமை உள்ளது.

ஆகவே, விரைந்து சுகாதாரத்துக்குப் பொறுப்பாக உள்ள வடக்கு மாகாண சுகாதார அமைச்சுச் செயலாளர், பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர், சுகாதாரத்துறை அதிகாரிகள் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இந்தப் பிரச்சினை, ஏனைய மாகாணங்களை விட, வடக்கு மாகாணத்திலேயே பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

தம்பி கத்தியால் குத்தியதில்

## அண்ணன் பலி

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு 1/4 பகுதியில் நேற்று முன்தினம் (09) அண்ணன் தம்பிக்கு இடையில் அலைபேசியால் ஏற்பட்ட சண்டை காரணமாக, அண்ணனை தம்பி கத்தியால் குத்திய பொழுது, சம்பவ இடத்திலேயே அண்ணன் பலியிகியுள்ளார்.

தருமராசா தவசீலன் என்ற 37 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இறந்துள்ளார். கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரை தருமபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை நகர சபையில்

## மீண்டும் கூட்டமைப்பு ஆட்சி

■ எஸ். தில்லைநாதன

பருத்தித்துறை நகர சபையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மீண்டும் ஆட்சியமைத்துள்ளது. கூட்டமைப்பின் சார்பில் தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்டவர் இரண்டு மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலையில், பருத்தித்துறை நகர சபையின் தவிசாளராக இருந்த யோ. இருதயராஜா (தமிழ்த் தேசிய கூட்டமைப்பு) கடந்த மாதம் பதவி விலகியதைத் தொடர்ந்து உருவான தவிசாளர் வெற்றிடத்துக்கே நேற்று முன்தினம் (10) தேர்தல் நடைபெற்றது. இதன்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் வேலுப்பிள்ளை நவரட்ணராஜா போட்டியிட்டார். அவரை ஆதரித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஐந்து உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி, சமத்துவக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த தலா ஒவ்வோர் உறுப்பினரும் என எட்டுப் பேர் வாக்களித்தனர்.

கூட்டமைப்பின் தவிசாளர் வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் ஆறு வாக்குகளையே பெற்றார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆறு உறுப்பினர்களும் அவரை ஆதரித்தனர்.

அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில்

## குருதி பரிசோதனை இல்லை

> கிளிநொச்சி வைத்தியசாலைக்கு செல்லுமாறு அறிவிப்பதன் காரணமாக, 5,000 வரையான குடும்பங்கள் பாதிப்பு

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் குருதி பரிசோதனை இடை நிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக, நோயாளர்கள் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

முன்னர், அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் நோயாளர்களிடம் குருதி சேகரிக்கப்பட்டு, கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, நோயாளர்களுக்கு முடிவுகள் அறிவிக்கப்படும். ஆனால், தற்போது நோயாளர்களை நேரடியாகவே கிளிநொச்சி வைத்தியசாலைக்கு செல்லுமாறு அறிவிக்கப்படுவதன் காரணமாக, அக்கராயன் பிரதேச வைத்தியசாலையை நம்பியிருக்கும் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், கந்தபுரம், முக்கொம்பன், கண்ணகைபுரம், கோணாவில், யூனியங்குளம், அமதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைக்கட்டியகுளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 5,000 வரையான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் குருதி பரிசோதனையை நோயாளர்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட பொதுமக்களால் கோரப்பட்டுள்ளது.

சீன அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ்

## பெரும்போக அறுவடைக்கான எரிபொருள்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு ஹெக்டேயருக்கு 15 லீற்றர் வீதம், அரை ஏக்கர் முதல் இரண்டரை ஏக்கருக்கு இடைப்பட்டநிலங்களைக் கொண்ட விவசாயிகளுக்கு சீன அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ், பெரும்போக அறுவடைக்கான எரிபொருள் இந்த வார இறுதியில் விநியோகிக்கப்படவுள்ளது என கிளிநொச்சி கமநல அபிவிருத்தி தினணக்களம் அறிவித்துள்ளது. குறித்த எரிபொருள் கிடைக்கப்பெறவுள்ள விவரம் வருமாறு:

கிளிநொச்சி கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட 425 ஹெக்டேயர் நிலப்பரப்பின் 683 விவசாயிகளுக்கு கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஊடாக விநியோகிக்கப்படும்.

இராமநாதபுரம் கமநலசேவை நிலையத்துக்கு உட்பட்ட 325.7 425 ஹெக்டேயர் நிலப்பரப்பின் 521 விவசாயிகளுக்கு யுனைட்டெட் எரிபொருள் மாட் (பிரை) லிமிட். ஊடாகவும் புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட 449.1 ஹெக்டேயர் நிலப்பரப்பின் 693 விவசாயிகளுக்கு கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஊடாகவும் முழங்காவில் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட 411.1 ஹெக்டேயர் நிலப்பரப்பின் 640 விவசாயிகளுக்கு பூநகரி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் முழங்காவில் கிளை ஊடாகவும் பூநகரி கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட 663.2 ஹெக்டேயர் நிலப்பரப்பின் 971 விவசாயிகளுக்கு பூநகரி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் வாடியடி கிளை ஊடாக விநியோகிக்கப்படும்.

அக்கராயன் குளம் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட 461.7 ஹெக்டேயர் நிலப்பரப்பின் 754 விவசாயிகளுக்கு அக்கராயன்குளம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஊடாகவும் பளை கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட 380.7 ஹெக்டேயர் நிலப்பரப்பின் 663 விவசாயிகளுக்கு ஆழ்வார்பிள்ளை, எம். கனகரத்தினம் ஊடாகவும் பரந்தன் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட 350.7 ஹெக்டேயர் நிலப்பரப்பின் 471 விவசாயிகளுக்கு பரந்தன் திருமதி தம்பிப்பிள்ளை ஊடாகவும் கண்டாவளை கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட 200.4 ஹெக்டேயரில் 293 விவசாயிகளுக்கு பரந்தன் திருமதி தம்பிப்பிள்ளை ஊடாகவும் உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட 507.4 ஹெக்டேயர் நிலப்பரப்பின் 765 விவசாயிகளுக்கு கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஊடாக விநியோகிக்கப்படும்.

கூட்டமைப்பு பிரிந்து நின்று தேர்தலில் போட்டியிட்டால்

# கூட்டமைப்புக்கு எதிராக மக்களை திசை திருப்புவோம்

## மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர் அமைப்பு கூட்டமைப்புக்கு எச்சரிக்கை

■ கனகராசா சரவணன்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் பிளவு, கிழக்கில் தமிழர்களின் இருப்பை நிச்சயம் கேள்விக் குறியாக்கும். எனவே, இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனித்து நின்று போட்டியிட்டால், அதற்கு எதிராக மக்களைத் தூண்டி, இவர்களுக்கு வாக்களிக்காதீர்கள் எனச் செயற்பட வேண்டிவரும் என மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கே. மோகான் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

செங்கலடியிலுள்ள தமிழ் உணர்வாளர் அமைப்பின் காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுறியதாவது:

உள்ளூராட்சி மன்ற தேர்தலில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரிந்து நின்று தேர்தல் களத்தில் குதித்திருப்பது, வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசியத்தை விரும்புகின்ற அனைவருக்கும் ஒரு பெரும் அதிர்ச்சியான செய்தியாக இருக்கின்றது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரிந்து நின்று தேர்தல் களத்தில் குதிக்குமாக இருந்தால், யாரும் எந்தக் கட்சிக்கும் வாக்களிக்க கூடாது என, நாங்கள் இவர்களுக்கு எதிராக மக்களை திசை திருப்புவோம்.

இந்தப் பிளவுகூட காலப்போக்கில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும். தமிழ்த் தேசிய நீரோட்டத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எந்தப் பங்களிப்பும் இல்லாமல், தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு தீர்வு அமையாது. எனவே, வடகிழக்கு தமிழர்களின் நன்மைகருதி, தமிழ்த் தேசிய கட்சிகள் ஒரு குடையின் கீழ் பயணிக்க வேண்டிய கட்டாய தேவை இருக்கின்றது. எனவே, அவசரமாகவும் அவசியமாகவும் தமிழ்த் தேசிய கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில் முடிவை எடுக்க வேண்டியது, எங்களது நிலைப்பாடு என்றார்.

மட்டு. மாவட்ட செயலகத்துக்கு

## புதிய நிர்வாக உத்தியோகத்தர்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்



மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு புதிய நிர்வாக உத்தியோகத்தராக கணபதிப்பிள்ளை மதிவண்ணன், திங்கட்கிழமை (09) கடமையை பொறுப்பேற்றார்.

1994ஆம் ஆண்டு அரசபணியில் இணைந்த இவர் கலைப் பட்டதாரியாவார். கல்வி அமைச்சு, பட்டிப்பளை பிரதேச செயலகம் ஆகியவற்றில் முகாமைத்துவ சேவை அலுவலராகவும், 2015ஆம் ஆண்டு பொது முகாமைத்துவ சேவை அதிசிறப்பு (சுப்ரா) தர பரீட்சையில் சித்தியடைந்து நிர்வாக உத்தியோகத்தராக தெரிவுசெய்யப்பட்டு, நொச்சிமுனை தொழில் நுட்ப கல்லூரியின் பதிவாளராகவும் கடமையாற்றியுள்ளார். இவர், மட்டு. சிவானந்தா பாடசாலையின் பழைய மாணவராவார்.



## கடற்கரையில் சிரமதான பணி

■ எம்.என்.எம் அப்ராஸ்

சுற்று சூழலை சுத்தமாக வைத்திருக்கும் முகமாக 'ஜிசேர்ப்' (GCERF) நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஹெல்விடாஸ் (HELVETAS) அனுசரணையில், சமாதானமும் சமூக பணி (PCA) நிறுவனத்தால் அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வை-சென்ச் (y-change) திட்டத்தின் கீழ் உள்ள கல்முனை பிரதேச இளைஞர் நல்லிணக்க குழுக்களின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து, கல்முனை மாநகர சபையின் ஒத்துழைப்புடன் கல்முனை கடற்கரை பகுதியில் சிரமதான பணி நேற்று (11) முன்னெடுக்கப்பட்டது.

சமாதான தொண்டர்களான ரி. டிலக்சினி, எம்.எஸ் றக்சானா, டி. சாலினி, எம்.எம்.எம் அஹ்னாப் ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை பிரதேச இளைஞர் நல்லிணக்ககுழுவின் தலைவர் எம். என்.எம் அப்ராஸ், எஸ். டினோசா ஆகியோரின் தலைமையில் இச்சிரமதானம் இடம்பெற்றதுடன், இதன் போது 'வை-சேன்ச்' திட்டத்தின் திட்ட இணைப்பாளர் ஐ. சுதாவாசன், நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்கள் கே.டி ரோகிணி, எம்.எல்.ஏ மாஜீத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'போதையை ஒழிப்போம் – மாணவர்களை காப்போம்'

## விழிப்புணர்வு சைக்கிள் ஓட்டம்

■ அபு அலா



பொத்துவில் ரோயல் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் 'போதையை ஒழிப்போம் - மாணவர்களை காப்போம்' எனும் தொனிப்பொருளில் திருகோணமலை முதல் பொத்துவில் அறுகம்பை வரையிலான தனிநபர் சைக்கிளோட்டம் நேற்று (11) காலை 6.30 மணியளவில் கிழக்கு மாகாண சபை முன்றலில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே முரளிதரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொத்துவிலைச் சேர்ந்த சுல்பிகார் என்ற சைக்கிள் ஓட்ட வீரர் இந்த விழிப்புணர்வு சைக்கிள் ஓட்டத்தில் ஈடுபட்டார்.

உயிர் மருத்துவ பொறியியலாளர்

## ரவிச்சந்திரனுக்கு பாராட்டுவிழா

■ வி.ரி சகாதேவராஜா



கல்முனை பிராந்திய சுகாதார திணைக்களத்தில் 22 வருடங்கள் உயிர் மருத்துவ பொறியியலாளராக சேவையாற்றி, மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் இராசையா ரவிச்சந்திரனுக்கு, காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (10) சேவை நலன் பாராட்டு விழா நடைபெற்றது.

காரைதீவைச் சேர்ந்த பொறியியலாளர் ரவிச்சந்திரனுக்கு, காரைதீவு வைத்தியசாலை பொறுப்பதிகாரி டொக்டர் நடராஜா அருந்திரன் பொன்னாடை போர்த்தி நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார்.

## கல்விச் சாதனையாளர்களுக்கு கௌரவம்





■ வி.ரி சகாதேவராஜா

அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியத்தின் (ஒஸ்கார்) கல்வித்திட்டங்களில் ஒன்றாக, 2022ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று, காரைதீவில் உள்ள பாடசாலைகளில் இருந்து பல்கலைகழகங்களுக்கு தெரிவான மாணவர்கள் நேற்று முன்தினம் (10) பாராட்டி கௌரவிக்கபட்டனர்.

அந்தவகையில், காரைதீவு பாடசாலைகளில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 29 மாணவ மாணவிகளுக்கும் பணப்பரிசில்களும் சான்றிதழ்களும், வைத்தியத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட நான்கு மாணவிகளுக்கும் பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிக்கும் 'ஒஸ்கார்' விசேட நினைவு சின்னங்களும் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டனர்.

விபுலானந்தா மத்திய கல்லூரி, காரைதீவு க.மு சண்முகா மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் இந்த விழா சிறப்பாக நடைபெற்றது.

# ஆடைகளில் கையை வைத்த 11 பேர் கைது

■ பாலித ஆரியவங்ச

தைத்து முடிக்கப்பட்ட ஆடைகளை, மிகவும் சூட்சுமமான முறையில் திருடிய குற்றச்சாட்டின் கீழ் இளைஞர்கள் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

ஆடை வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகருக்குச் சொந்தமான களஞ்சியசாலையில், யன்னலை உடைத்துக்கொண்டு உள்நுழைந்தே திருடிச் சென்றுள்ளனர். அவ்வாறு திருடப்பட்ட ஆடைகளின் மொத்த பெறுமதி 28 இலட்சம் ரூபாயாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

களஞ்சியசாலையில் கட்டடத்துக்கு அண்மையில் பல வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகள் இருக்கின்றன. எனினும், காட்போட் பெட்டிகளில் பொதியிட்டு அவை, இராபகலாக எடுத்துச் செல்லப்பட்டமையால், எவருமே சந்தேகம் கொள்ளவில்லை.

எவ்வாறாயினும், 1,300 ரூபாய் பெறுமதியான சேர்ட், பண்டாவளை நகரில் வீதியோரத்தில் போட்டு 300 ரூபாய்க்கு விற்பனைச் செய்யப்படுவதாக கிடைத்த தகவல்களை அடுத்து அந்த வர்த்தகர் தன்னுடைய களஞ்சியசாலையை ஒரு சந்தேகத்தில் சோதனையிட்டுள்ளார். அதன்போது, பெருந்தொகையான ஆடைகள் களவாடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 11 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என்பதுடன் அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் ஒருதொகை ஆடைகள் கைப்பற்றப்பட்டன.




மரவள்ளி, வத்தாலி

# கிழங்குகளும் கசக்கின்றன

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் நகரில், மரவள்ளிக் கிழங்கு, வத்தாலி கிழங்கு மற்றும் பலாக்காய் பொதி ஆகியவற்றின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன என சுட்டிக்காட்டிய நுகர்வோர், இந்த விலை அதிகரிப்பினால் தாங்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாக தெரிவித்தனர்.

ஹட்டன் நகரில் சில்லறை வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ கிராம் மரவள்ளிக் கிழங்கு 200 ரூபாய்க்கும், வத்தாலி கிழங்கு ஒரு கிலோகிராம் 160 ரூபாய்க்கும், சுத்தம் செய்யப்பட்ட பலாக்காய் பொது ஒரு கிலோ கிராம் 200 ரூபாய்க்கும் விற்பனைச் செய்யப்படுகின்றன.

மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளமையால், மரவள்ளிக்கிழங்கு, வத்தாலி கிழங்கு மற்றும் பலாக்காய் ஆகியவற்றுக்கு கிராக்கி அதிகரித்துள்ளது. எனினும், அவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன.

மேலே, குறிப்பிடப்பட்டுள்ள இந்த மூன்று பொருட்களின் விலைகளும் இந்தளவுக்கு அதிகரித்துள்ளமை ஹட்டனில் இதுவே முதல்தடவையாகும் என்றும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

# மலசலக்கூட தொகுதி கறந்து கொடுத்தது

■ எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகரத்தில் மலசலக்கூட தொகுதி மற்றும் வாகனங்கள் நிறுத்தப்படும்போது அறவிடப்படும் கட்டணங்கள் அறவிடல் ஆகியவற்றுக்காக கோரப்பட்ட விலைமனுக்கள் மூலமாக, ஹட்டன் நகரை சபைக்கு இவ்வருடத்தில் 138 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது என ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கிடைக்கும் சகல வருமானங்களும் ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களின் நலன்களுக்காகவும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.



# விழிப்புணர்வு செயற்றிட்டம்

■ நடராஜா மலர்வேந்தன்

கல்வி அமைச்சின் பணிப்புரையின் கீழ் நாடளாவிய ரீதியில் செயல்படுத்தப்படும் மாணவர் விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் "நிலையான தன்மையில் அமர செய்யும் உளவளச்செயற்பாடு" பசறை, கோணங்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையில் புதன்கிழமை (11) நடைபெற்றது.

பசறை தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். மாணவர்களுக்கு சேமிப்பு கணக்கும் ஆரம்பிக்கப்பட்டன.



# பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைப்பு

■ மொஹொமட் ஆஸிக்

அக்குறனை , புளுகொஹொதென்னபல்லேவெலிகெட்டிய பகுதியைச் சேர்ந்த தெரிவுச் செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலவச பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் திங்கட்கிழமை (09) வழங்கப்பட்டன

அப்துல்கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையினால் 50 ற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அவை வழங்கப்பட்டன. இதற்கான நிதியுதவியை இஸ்லாமிய செரன்டிப் பவுண்டேசன் நிதியத்தின் தலைவர் தேசமாண்ய, தேசபந்து அல்ஹாஜ் கே.எம். எஸ்.எம். றாசிக் வழங்கி இருந்தார்.

நிகழ்வில், அப்துல்கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையின் தலைவர் என். கருணாகரன், இஸ்லாமிய செரன்டிப் பவுண்டேசன் நிதியத்தின் தலைவர் கே.எம். எஸ், எம். றாசிக், எம். கைசர், மற்றும் பொலிஸ் அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# காங்கிரஸின் தைப்பொங்கல் இம்முறை இடம்பெறாது


■ ஆ.ரமேஸ்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தைப்பொங்கல் நிகழ்வுகள் இம்முறை இடம்பெறாது என காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தைபொங்கல் நிகழ்வுற்காக செலவழிக்க திட்டமிடப்பட்டுள்ள பணத்தொகையை மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், மலையக மக்களின் நிவாரண திட்டத்துக்கும் பயன்படுத்தபடும் எனவும் பொதுச்செயலாளர் தெரிவித்தார்.

அத்துடன் காலங் காலமாக காங்கிரஸ் ஒவ்வொரு தைப்பொங்கல் நிகழ்வினையும் மலையக பிரதேசங்களில் பொங்கல் விழா எனவும், உழவர் திருநாள் எனவும் சிறப்பாக கொண்டாடுவது வழக்கமாகும்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தைப்பொங்கல் நிகழ்வுகள் இம்முறை இடம்பெறாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கணித முகாம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

கணித பாடத்தின் மீதான மாணவர்களின் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், "கணித முகாம்" ஹட்டன் வலயக்கல்வி வலயத்தின் கீழுள்ள, டிக்கோயா தமிழ் மகா வித்தியாலயத்தில் புதன்கிழமை (11) நடைபெற்றது.

அந்த பாடசாலையில் கல்விப்பயிலும் மாணவ, மாணவிகளால் இந்த முகாம் நடத்தப்பட்டது. அதில், பங்குப்பற்றுவதன் ஊடாக, கணித பாடத்தின் மீதான ஆர்வத்தை அதிகரித்துக்கொள்ள முடியுமென மாணவ, மாணவிகள் தெரிவித்துள்ளனர்.

ஹட்டன் கல்விவலயத்தின் கீழுள்ள ஏனைய பாடசாலை மாணவ, மாணவிகளும் இந்த கணித முகாமில் பங்குப்பற்றியுள்ளனர். இந்த முகாம் இன்று (12) வரையிலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.



# "முன்பள்ளி பாடசாலைகளில் வளங்களை அதிகரிப்பேன்"

■ நீலமேகம் பிரசாந்த்

பிள்ளைகளின் கல்வியில் முதல் படியாக இருக்கும் முன்பள்ளி பாடசாலைகளின் வளங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்புச் செயலாளர் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்துள்ளார்.

பதுளை, கனவரல்ல முன்பள்ளி பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துக்கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில், அத்திபாரம் முறையாக காணப்பட்டாலே முடிவு உறுதியாக இருக்கும். அதுபோல பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய முன்பள்ளி பாடசாலை வளங்களை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்றார். மலையக மக்கள் முன்னணி தலைவர் ராதாகிருஸ்ணன் எம். பியின் கவனத்துக்கு இவ்விடயத்தை கொண்டுச் சென்றுள்ளதாகவும் விரைவில் எவ்வித குறைபாடுகளுமற்ற முன்பள்ளி பாடசாலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார். இந்நிகழ்வில், கனவரல்ல தோட்ட நலன்புரி உத்தியோகத்தர்,முன்பள்ளி ஆசிரியர்கள்,பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "என் பெயரை மாற்ற முயற்சிக்கின்றனர்"

■ எச்.எம்.ஹேவா

அம்பகமுவ பிரதேச சபையின் ஊடாக 2011 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட புளியாவத்தை (ஹொான்ஸி) ரவிந்திரன் சிறுவர் பூங்காவின் பெயரை மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கெதிராக முறைப்பாடு செய்வேன் என அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் தலைவர் எம். இரவீந்திரன் தெரிவித்தார்.

இந்த முயற்சி, நோர்வூட் பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அம்பேகமுவ பிரதேச சபையின் தலைவராக நான் பணியாற்றிய காலத்தில், அப்போது மத்திய மாகாண உறுப்பினராக இருந்த கே.கே. பியதாஸ, நிதியுதவியுடன் இந்த சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்பட்டது.

அன்றிலிருந்து 2017 வரையிலும் அம்பேகமுவ பிரதேச சபையின் ஊடாக இந்த சிறுவர் பூங்கா நிர்வகிக்கப்பட்டது. அந்த பூங்கா நோர்வூட் பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் 2018ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அதன்பின்னர், இன்று வரையிலும் மூடப்பட்டு கிடக்கிறது.

எனினும், நோர்வூட் பிரதேச சபையின் ஊடாக அந்த பூங்காவின் பெயரை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பில் மத்திய மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுச் சென்று முறைப்பாடு செய்வேன் என்றும் ரவீந்திரன் மேலும் தெரிவித்தார்.

# முன்மாதிரியான பொங்கல் விழா...



■ பாலித ஆரியவன்ச

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தைப்பொங்கல் விழா தேசிய ஒருமைப்பாடு மற்றும் சர்வமத சகவாழ்வை எடுத்துக்காட்டும் வகையில் பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது.

தைப் பொங்கல் தயாரித்தல்இ கடவுளுக்குப் படையல்இ தமிழ்இ சிங்களஇ முஸ்லிம் கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ஜயந்தலால் ரத்னசேகரவின் ஆலோசனையின் பேரில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த தைப் பொங்கல் விழாவில் பல்கலைக்கழக மாணவர்கள்இ மருத்துவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

# அதிகரிக்கும் அரசாங்கத்தின் மீதான மக்களின் அதிருப்தி

ஆட்சியிலிருக்கும் அரசாங்கம், மக்களின் சாபத்துக்கு என்றோ ஒருநாள் ஆளாகவே வேண்டும். புது அரசாங்கத்தை ஆட்சிப்பீடமேறச் செய்வதும், இருக்கும் அரசாங்கத்தை பூண்டோடு விரட்டிவிடுவதும் மக்களின் ஒவ்வொரு புள்ளடியிலுமே தங்கியிருக்கிறது.

சிந்திக்கத் தெரியாத மக்களென எவராவது சொல்வார்களாயின், 'முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள்' இருக்கவே மாட்டார்கள். ஆக, வாக்காளர்கள் சிந்திக்கின்றனர் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டைவிட்டோடி பதவியைத் துறந்ததன் பின்னர், புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவால், அமெரிக்க டொலரை நாட்டுக்குள் கொண்டுவரமுடியுமென அதீத நம்பிக்கையை வைத்திருந்தவர்கள், சில்லறையாவது கிடைக்குமா என சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

ஓய்வூதியம் பெறுவோர், சிரேஷ்ட பிரஜைகள், வங்கிகளில் கணக்கு வழக்குகளைப் பேணுவோர், அரசாங்க ஊழியர்கள், சமுர்த்தி பயனாளர்கள் என ஒவ்வொரு தரப்பினரும் அரசாங்கத்தின் மீது வசை பாடிக்கொண்டிருக்கின்றனர். அந்தளவுக்கு பொருளாதார நெருக்கடிக்கு மக்கள் முகங்கொடுக்கின்றனர்.

ஒவ்வொரு பொருளின் விலையும் எகிறி நிற்கின்றது. குறைந்த வருமானம் பெறுவோரை கவனத்தில்கொண்டு சதொசவில் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் விலை குறைக்கப்பட்ட பொருட்களுக்கு அங்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இல்லையேல், தரமான பொருட்கள் கையிருப்பில் இருக்காது.

இந்நிலையில், அரச ஊழியர்களுக்கு எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு போதியளவு பணம் இல்லையென்றும், சமுர்த்தி பயனாளர்களுக்கான கொடுப்பனவை வழங்க இரண்டொரு வாரகாலம் எடுக்குமெனவும் அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்காக தபால் நிலையங்களுக்கு சென்றிருந்த பலரும் வீசிய கையும் வெறுங்கையுடன் வீடுகளுக்குத் திரும்பியதையும் அரசாங்கத்தின் மீது வசை பொழிந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

ஓய்வூதியம் பெறுபவர்களில் பலர், அந்தப் பணத்தை தங்களுடைய மாதாந்த மருந்து செலவுகளுக்கே பயன்படுத்துவர். சமுர்த்தி பயனாளர்களுக்கு அந்த உதவி கிடைத்தால் மட்டுமே இரண்டொரு வாரங்களுக்கு அவர்களின் வீடுகளில் அடுப்பு எரியும். இவ்விரு தரப்புகளைச் சேர்ந்தவர்கள் முகக்கொடுக்கும் நெருக்கடிகள் சொல்லில் அடங்காதவை.

அமெரிக்க டொலரை நாட்டுக்குள் கொண்டுவந்து, அன்னியச்செலாவாணியை பெருக்கி, நாட்டை கட்டியெழுப்புவார்; புதிய அரசாங்கத்தால் அது முடியுமென்ற நம்பிக்கையை மிக ஆழமாக வைத்திருந்தவர்கள், அரசாங்கத்தை தூற்றத் தொடங்கிவிட்டனர்.

இவ்வாறானதொரு நிலையில்தான், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அறிவிப்பு வெளியாகியுள்ளது. கொதித்தெழுந்து, சாந்தமாகி இருந்த மக்களின் மனங்களில் இவ்வரசாங்கம் கோபத்தை விதைத்துவிட்டது. அதனால்தான், அரசாங்கத்தின் மீதான வெறுப்பு, மக்கள் மத்தியில் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

இவ்வாறானதொரு நிலையில் புள்ளடியை இடுவதற்கான சந்தர்ப்பமொன்று கிடைக்குமாயின், தக்க பாடத்தை கற்பிப்பர் என்பதை நினைவில் கொண்டு, மக்கள் மீதான சுமையை குறைக்கும் வழிகளை அரசாங்கம் தேடவே வேண்டும்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள் www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# தனித்துப் போட்டி: பங்காளிகளை நோக்கி தமிழரசு வீசிய சாட்டை



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தன்னுடைய இறுதி நாள்களை எண்ணத் தொடங்கிவிட்டது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் தீர்மானத்தை இலங்கை தமிழரசுக் கட்சி எடுத்ததன் மூலம், கூட்டமைப்புக்கான முடிவுரை எழுதப்பட்டிருக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்துக்குப் பின்னர், கூட்டமைப்பு தன்னையொரு தேர்தல் கூட்டாக மெல்ல மெல்லச் சுருக்கிக் கொண்ட போதே, அதன் அழிவுகாலம் ஆரம்பித்துவிட்டதை தமிழ் மக்கள் உணர்ந்து விட்டார்கள். ஏனெனில், தேர்தல் வெற்றிகளை மாத்திரம் முன்னிறுத்தி செயற்படும் கூட்டுகள், நீண்ட காலம் நீடிப்பதற்கான வாய்ப்புகள் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை.

விடுதலைப் புலிகளின் ஒத்தாசையோடு ஆரம்பிக்கப்பட்ட கூட்டமைப்பு, இரண்டு தசாப்த காலத்தைக் கடந்திருக்கின்றது. கூட்டமைப்பு, புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று ஏற்று, அதனை தேர்தல் களத்தில் நிரூபிப்பதற்காக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டாகும். புலிகள் இருக்கும் வரையில், கூட்டமைப்பிற்கான தீர்மானங்களை 'கிளிநொச்சி'யே எடுத்தது. கூட்டமைப்பை ஆரம்பிப்பதற்காக கிழக்கிலும் கொழும்பிலும் தொடர்ச்சியாக இயங்கிய ஊடகவியலாளர்கள், கல்விமான்கள் தரப்பு, கூட்டமைப்பைக் கட்சியாக பதிவு செய்வதற்காக முயன்ற போது, கிளிநொச்சியிலிருந்து வந்த தொலைபேசி அழைப்புகள் அதைத் தடுத்தன.

குறிப்பாக, கூட்டமைப்பைக் கட்சியாக பதிவு செய்யும் நோக்கில், கட்சிக்காக வரையப்பட்ட யாப்பு பணிகள் இடைநடுவில் புலிகளால் நிறுத்தப்பட்டன. "... கூட்டமைப்பை பதியத் தேவையில்லை. ஏனெனில், இந்தக் கட்சிக்காரர்களை முழுதாக நம்ப முடியாது. அது, ஒரு தேர்தல் கூட்டாக மாத்திரம் இருக்கட்டும்..." என்பதுதான் புலிகளின் நிலைப்பாடு. கூட்டமைப்பை கட்சியாக பதிவு செய்ய விரும்பிய தரப்பினரிடம், 'கிளிநொச்சி' அதனைத்தான் வலியுறுத்தியது. தொடர் அர்ப்பணிப்புகளின் வழியாக எழுந்த போராட்ட அமைப்பொன்று, தங்களை மீறி இன்னொரு தரப்பு மேலெழுவதை விரும்பாது. புலிகளும் அதைத்தான் செய்தார்கள்.

ஆனால், புலிகளின் காலத்துக்குப் பின்னரும் 13 ஆண்டுகள், கூட்டமைப்பு நீடித்திருந்தது என்றால் அது, இரா.சம்பந்தன் என்கிற ஒற்றை மனிதரால்தான் சாத்தியமானது. '...புலிகள் இப்போது இல்லை. இனி என்னுடைய இறுதிக் காலம் வரையில் நான்தான் தமிழினத் தலைவர்; என்னைத் தாண்டி யாரும் வர முடியாது...' என்பது சம்பந்தனின் எண்ணம்.

கூட்டமைப்பிலிருந்து அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எப் உள்ளிட்ட கட்சிகள் வெளியே சென்ற போதும், பங்காளிக் கட்சிகளுக்குள் இருந்து 'கட்சி விட்டோடி'கள் வெளியே சென்று புதிய கட்சிகளை ஆரம்பித்த போதும், 'தமிழின தலைவர்' எனும் அடையாளத்தை அவர் யாருக்கும் விட்டுத்தரத் தயாராக இருக்கவில்லை.

தான் அரசியலுக்கு அழைத்து வந்த சி.வி விக்னேஸ்வரன், தனக்கு நிகரான ஒரு தலைவராக உருவாகும் வாய்ப்புகளை வடக்கு அரசியல் களம் உருவாக்கிய போது, தன்னுடைய 'விட்டுப்பிடிக்கும்' உத்தி ஊடாக, விக்னேஸ்வரனை வீழ்த்தினார். தமிழரசுக் கட்சியோடு விக்னேஸ்வரன் முரண்பட ஆரம்பித்த 2015ஆம் ஆண்டு காலத்திலேயே, அவரை வெளியேற்றியிருந்தால், கூட்டமைப்புக்கு மாற்றான அணியொன்று பெரியளவில் உருவாகியிருக்கும். இப்போது, அதன் தலைவராக விக்னேஸ்வரன், சம்பந்தனுக்கு சமமாக வந்திருப்பார். ஆனால், அதனை அவர் உணர்ந்து, விட்டுப்பிடிக்கும் உத்தியை விக்னேஸ்வரனுக்கு எதிராக வெற்றிகரமாக நிலை நிறுத்திக் காட்டினார்.

இப்போது சம்பந்தன் உடலளவில் தளர்ந்துவிட்டார். அவருக்கு தமிழ்த் தேசிய அரசியலில் இருந்த பிடியும் தளர்ந்துவிட்டது. கடந்த பொதுத் தேர்தல் காலத்திலேயே அது வெளிப்பட்டது. சம்பந்தனின் பிடி தளர ஆரம்பித்ததும், அவர் பிளவுகளை ஒட்டியும் மறைத்தும் வைத்து காத்து வந்த கூட்டமைப்பும் உடைந்து கலகலக்கத் தொடங்கிவிட்டது. அவரால் இன்றைக்கு எந்தவொரு பங்காளிக் கட்சியையும் கட்டுப்படுத்த முடியாது. ஏன், அவரின் தமிழரசுக் கட்சிக்குள் கூட தீர்மானங்களை முன்மொழிய முடியாது. தன்னுடைய மரியாதையை பேண வேண்டுமானால், தமிழரசின் மத்திய குழு முடிவுக்கு இணங்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் சம்பந்தனின் முடிவுகளை அங்கிகரிப்பதற்காக, அல்லது நியாயப்படுத்துவதற்காக மாத்திரமே தமிழரசின் மத்திய குழு கூட்டப்பட்டிருக்கின்றது. இன்று நிலை அப்படியில்லை. கட்சியின் தலைவராக இருக்கும் மாவை சேனாதிராஜாவே, மத்திய குழு முன்னிலையில் வாய் திறக்க பயப்படுகிறார். அவர், பேசிக் கொண்டிருக்கும் போதே, எதிர்க்கருத்துகள் உடனுக்குடன் விடுக்கப்படுகின்றன. அப்படியான நிலையில், சம்பந்தன் இன்று முடிவுகளை எடுத்து அறிவிக்கும் நிலையில் இல்லை. அதனால், கட்சியின் கருத்தை ஏற்பதுதான் அவருக்கு இருக்கும் ஒற்றைத் தெரிவு.

வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவது என்ற முடிவை எடுத்த போது, அதனை சம்பந்தன் விரும்பவில்லை. தனக்கு நெருக்கமானவர்களிடம் அதனை அவர் வெளிப்படுத்தவும் செய்தார். ஆனால், தன்னுடைய விருப்பு வெறுப்புகள் குறித்து சிந்திப்பதற்கு, இன்றைக்கு தமிழரசு தயாராக இல்லை என்ற போது, தேவையின்றி வாயைக் கொடுக்காமல் இருப்பது, தனது மரியாதையைக் காப்பாற்றுவதற்கு உதவும் என்பது அவருக்கு நான்றாகத் தெரியும்.

கூட்டமைப்பு, தேர்தல் மைய அமைப்பாக சுருங்க ஆரம்பித்ததும், பங்காளிக் கட்சிகள் தங்களது நிலையை பலப்படுத்த ஆரம்பித்துவிட்டன. ஒரு கட்டம் வரையில் தமிழரசு ஏக நிலையில் நின்று ஆடியது. குறிப்பாக, கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் வரையில், கூட்டமைப்புக்குள் தங்களைக் கேள்வி கேட்க யாரும் இல்லை என்றிருந்தது.

ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு சந்தித்த தோல்வி, குறிப்பாக தமிழரசின் தோல்வி, பங்காளிக் கட்சிகளை பலம்பெற வைத்தது. கிட்டத்தட்ட கூட்டமைப்புக்குள் தமிழரசு ஒரு பக்கமும், டெலோவும் புளொட்டும் இன்னொரு பக்கத்திலும் நின்று ஆடித் தீர்த்தன. தமிழரசை வெறுப்பேற்றுவதற்காக தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறிவர்கள், எதிரணியினர் என்று அனைத்துத் தரப்பினரோடும் இணைந்து டெலோவும் புளொட்டும் அரங்க அரசியல் செய்தன.

அது, தமிழரசுக்குள் நான் பெரிதா நீ பெரிதா என்று முரண்பட்டு நிற்கின்ற தலைவர்களைக் கூட எரிச்சல்படுத்தியது. இதுதான், கடந்த வாரம் மட்டக்களப்பில் இடம்பெற்ற தமிழரசின் மத்திய குழுக் கூட்டத்தில் தனித்துப் போட்டியிடும் முடிவை எடுக்கக் காரணமானது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையில் காணப்படும் விகிதாசார வெற்றி வடிவத்துக்குள் குழப்பமான நிலை இருக்கின்றது. தனித்து ஆட்சியமைக்க வேண்டுமனால், ஒவ்வொரு கட்சியும் அந்த மன்ற எல்லைகளுக்குள் குறைந்தது 75 சதவீதத்துக்கு குறையாத வாக்குகளைப் பெற்றாக வேண்டும்.

இதனால், இந்தச் சிக்கல்களை தவிர்ப்பதற்காக, கூட்டமைப்பிலுள்ள மூன்று கட்சிகளும் தனித்தனியாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றதும், அதன் பின்னர் இணைந்து கூட்டமைப்பாக ஆட்சி அமைப்பது சாதகமான கட்டங்களை ஏற்படுத்தும் என்று கூறித்தான் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடும் முடிவை முன்வைக்கின்றது.

கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் அதனை முன்வைத்துத்தான், தனித்துப் போட்டியிடும் தங்களின் முடிவை தமிழரசு இறுதி வரையில் நியாயப்படுத்தியது. தமிழரசின் இந்த வாதம் நிராகரிக்கக் கூடியது அல்ல. ஏனெனில், கடந்த உள்ளூராட்சி மன்ற முடிவுகள் அதற்கு சான்றாக இருக்கின்றன.

ஆனால், உண்மையில், தமிழரசுக் கட்சிக்கு தங்களை மீறி கூட்டமைப்புக்குள் நிலையெடுத்து ஆட நினைக்கும் பங்காளிக் கட்சிகளை அடக்கி வைக்கும் அவசரம் ஏற்பட்டிருக்கின்றது. அதற்கு, தனித்துப் போட்டியிடுவது எனும் உத்தியை கையிலெடுத்திருக்கின்றது.

அதன்மூலம், வீட்டுச் சின்னம் இல்லாமல், டெலோவும் புளொட்டும் தங்களை நிரூபித்துவிட்டு வந்து கூட்டமைப்புக்குள் ஆடட்டும். அப்போது, அவர்களின் ஆட்டத்தை சகித்துக் கொள்ளலாம். அது இல்லாமல், தமிழரசின் வீட்டுச் சின்னத்தில் நின்று வெற்றிபெற்றுவிட்டு ஆடுவதையெல்லாம் பொறுக்க முடியாது என்பது, தமிழரசுக் கட்சியின் கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையிலுள்ள உறுப்பினர்களின் நிலைப்பாடு.

தனித்துப் போட்டியிடுவது என்ற முடிவை இனி தமிழரசு மாற்றிக் கொள்ளாது. இதுவரை காலமும் கூட்டமைப்பு என்றால், வீட்டுச் சின்னம். அதனை இனி, பங்காளிகளோடு பகிராமல் பார்த்துக் கொள்ள தமிழரசு முடிவெடுத்திருக்கின்றது.

டெலோவும் புளொட்டும் தனித்து களம் காணுவதற்கான வாய்ப்புகள் இல்லை. அப்படி போட்டியிட்டால், அவர்களால் வெற்றிபெற முடியாது. அப்படியான நிலையில், தமிழரசுக்கு எதிராக, பலமான அணியொன்றை கட்டவே நினைப்பார்கள். அவர்களின் தெரிவு, விக்னேஸ்வரன் தலைமையிலான ஓர் அணி. அதனைவிட்டால் வேறு வழியில்லை.

விக்னேஸ்வரன் தலைமையிலான புதிய கூட்டில் மானாக துள்ளிக் குதிக்கிறார்களோ அல்லது, மீனாக நீச்சல் போடப் போகிறார்களோ என்பது இன்று வியாழக்கிழமை தெரிந்துவிடும். இன்று விக்னேஸ்வரன் தலைமையில் செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் உள்ளிட்டோர் புதிய தேர்தல் கூட்டு பற்றி யாழ்ப்பாணத்தில் அறிவித்தல் விடும் வாய்ப்பு உண்டு.

பங்காளிக் கட்சிகள் தங்களுக்கு எதிரான புதிய கூட்டில் இணைந்த பின்னர், மீண்டும் அவர்களோடு இணைந்து போட்டியிடுவது என்பது அவ்வளவுக்கு சாத்தியமான ஒன்றல்ல என்பது தமிழரசுக் கட்சிக்கு தெரியும். தமிழ்த் தேசிய பரப்பில் தன்னை முதன்மைக் கட்சியாக நிரூபிக்கவும், புலிகள் மீட்டுக் கொடுத்த வீட்டுச் சின்னத்தின் மூலம் கிடைக்கும் வாக்கு அறுவடையை முழுமையாக அனுபவிப்பதற்காகவும் தமிழரசுக் கட்சி வீசியிருக்கின்ற சாட்டையே, தனித்து போட்டியிடுவது என்கிற விடயம்.

கூட்டமைப்பின் இறுதி நாள்கள் அவசரமாக எண்ணப்படுகின்றன. அது, பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளும் நிலையில் தமிழ் மக்களும் இல்லை. ஏனெனில், போலி ஒற்றுமையால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை. கூட்டமைப்பின் இறுதிக் காலம் அப்படித்தான் இருக்கின்றது.



## வாழ்வியல் தரிசனம்

அவசரம் அவசரமாக ஓடியோடி கருமம் புரிபவர்கள், ஓய்வே இல்லாமல் உழைத்தால், அதற்கும் எதிர்த்தாக்கம் ஏற்படலாம்.

எவ்வளவு அதிகம் வேலை செய்தாலும் கட்டாயம் ஓய்வு எடுக்க வேண்டும். கடினமான இரும்பும் தொடர்ந்து சுழன்றால் தேய்ந்துவிடும்.

அவசர உலகில் இயங்கும் மனிதர், போட்டிமிகு வாழ்க்கையுடன் போராடுகின்றனர். எவ்வளவு உழைத்தாலும் செலவுகள் கூடிவிட்டால், என்ன செய்யமுடியும்?

உலகத்தின் சுழற்சியை விடவும் மனிதனின் சுழற்சி கூடியபடி இருக்கிறது. திட்டமிட்ட வாழ்க்கை முறை அவசியமானது.

கருமங்களை அட்டவணைப்படுத்தி, முறைப்படி செய்தால், காலவிரயம் வரமாட்டாது. அனுபவ அறிவின் மூலம் வேலைகளை நன்கு செப்பனிட முடியும்.

கருமங்களை ஒத்திவைத்தால், அவைகளை முடிப்பது கடினம். உணரவேண்டும். வீண் பரபரப்புத் தேவையில்லை. ஒழுங்காக உழைப்போம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஆரோக்கியபுரம்

## சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் செயலிழப்பு

முல்லைத்தீவு, துணுக்காய், அமதிபுரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஆரோக்கியபுரம் கிராமத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் தற்போது செயலிழந்துள்ளது.

இலங்கை கடற்படையினரால் இக்குடிநீர் திட்டம் அமைத்து வழங்கப்பட்டது. 80 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரைப் பெற்று பயன்பெற்று வந்த நிலையில், கடந்த ஐந்து மாதங்களாக குறித்த குடிநீர் திட்டம் செயலிழந்து காணப்படுகின்றது.

குடிநீர் திட்டத்தை செயற்படுத்துவதற்கு மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாததன் காரணமாகவே இத்திட்டம் செயலிழந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆரோக்கியபுரம் கிராமத்தில், துணுக்காய் பிரதேச சபையால் அமைக்கப்பட்ட குடிநீர் திட்டம் ஒன்று, 60 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றனர்.

கடற்படையினரால் அமைக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் மூலம் 80 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பயன்பெற்று வந்த நிலையில், இத்திட்டம் செயலிழந்த நிலையில் குடிநீருக்கான நெருக்கடியை தற்போது குடும்பங்கள் எதிர்கொண்டுள்ளன.

இக்குடிநீர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு துணுக்காய் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆரோக்கியபுரம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இத்திட்டம் செயலிழந்து இருப்பது தொடர்பாக கிராம அலுவலர் ஊடாக, பிரதேச செயலகத்திற்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நடராசா கிருஸ்ணகுமார்



# நகர சுத்திகரிப்பாளர்களும் நரகமும்


துசியந்தி பரமேஸ்வரன்
(ஊடக கற்கைகள் துறை யாழ். பல்கலைக்கழகம்)



‘தீண்டாமை பாவம்; கடவுளுக்கும் மனித குலத்திற்கும் எதிரானது’ எனக் கூறினாலும், கடவுளை வைத்து உருவாக்கிய நால்வருணக் கொடுமையால் உருவானது தீண்டாமை எனும் போது கடவுளும் இதற்கு உடந்தை தானே? பாவம் செய்தது கடவுளும் தானே. இதனால் தான் தீண்டாமை எனும் சொல் இன்றும் நம்மத்தியில் ஊடாடிக்கொண்டிருக்கிறது. தீண்டாமை என்பது ஆரம்பகாலத்தில் சாதிய ரீதியில் அதாவது ஒருவரின் பிறப்பின் அடிப்படையில் பார்க்கப்பட்ட போதும் தீண்டாமை என்பது வெவ்வேறு வழிமுறைகளில் இன்றும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கிறது.

கல்வி, மருத்துவம், தொழில், மேம்பாடு உள்ளிட்ட பெரும்பாலான விடயங்களில் சமூக முன்னேற்றத்தைக் கண்டிருந்தாலும் இன்றும் நம்மத்தியில் தொழில் ரீதியிலான அடக்குமுறைகளும் தொழிற் சுரண்டல்களும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

போட்டி போட்டுக் கொண்டு வேலையை பெற்றுக்கொண்டாலும் குறித்த தொழில்கள் தான் உயர்வானவை மற்றையவை மட்டமானவை போன்ற ஒரு மறைமுகமான சிந்தனையை இந்த சமூகம் ஏற்படுத்தியுள்ளது.

அந்தவகையில் இன்றும் நம்மத்தியில் நகர சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் நிலை என்பது அடிமைப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகிறது. இவர்களுடைய வாழ்வியலை எடுத்து நோக்குவோமானால் இவர்கள் தங்களுடைய தினக்கூலி வாழ்வாதாரத்திற்கே அனுதினமும் போராட வேண்டிய நிலையே காணப்படுகிறது.

ஏனைய சமூகத்தவர் மத்தியில் இவர்கள் இழிவாகப் பார்க்கப்படுவதோடு அவர்களுடைய எடுபிடி வேலைகளை மேற்கொள்ளும் ஒரு கூலியாட்களாகவே இவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்; இவர்கள் அன்றாடம் எத்தனையோ வீடுகளில் குப்பைகளை அகற்றி அவர்கள் வாழ்வதற்கான அழகான சுத்தமான சூழலை உருவாக்கிக் கொடுக்கிறார்கள்.

ஆனால், இவர்களுடைய அன்றாட வாழ்க்கை முறைமையோ கேள்விக் குறியாகக் காணப்படுகிறது. நாம் வாழும் சூழலை சுத்தமானதாக மாற்றும் இவர்கள் சுத்தமற்ற அடிப்படை வசதிகளற்ற ஒரு குடியிருப்புகளிலேயே தமது வாழ்க்கையை கொண்டு நடாத்துகின்றார்கள். ஆம் இவர்களுடைய வீடுகளோ அல்லது இவர்கள் குடியிருக்கும் காணிகளோ கூட நிரந்தரமற்றவையாகவே காணப்படுகின்றன. இவர்கள் குடியிருக்கும் வீடுகளுக்கானதோ அல்லது நிலத்திற்கான உறுதியோ கூட இவர்களிடம் இல்லை என்பதே உண்மை.

இவர்களுடைய குடியிருப்புக்களைப் பார்ப்போமேயானால் ஒரு வீட்டிற்குள் ஆறு, ஏழு குடும்பங்கள் வசிப்பவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் குடியிருக்கும் வீடுகள் கூட பரந்து விரிந்ததாக காணப்படாது. மிகவும் சிறிய வீட்டிற்குள் இந்தக் குடும்பத்தவர்கள் தங்களுடைய பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு வாழ்கிறார்கள். அத்தோடு அடிப்படை சுகாதார வசதியான மலசலகூட வசதி கூட இவர்களுக்கு இல்லை. ஒரு மலசல கூடத்தையே பொதுக் கழிப்பறை போன்று அனைவரும் பயன்படுத்த வேண்டிய தேவையும் இவர்களுக்குக் காணப்படுகிறது. இதனால் பெரும் அசௌகரியங்களையும், சுகாதாரப் பிரச்சினைகளையும் இவர்கள் எதிர் கொண்டு வருகிறார்கள்.

அத்தோடு வீட்டு வாயில்களுக்கு முன்பாகவே கால்வாய்கள் காணப்படுவதாலும் அக்கால்வாயினூடாகவே அனைத்துக் கழிவுகளும் வெளியேற்றப்படுவதாலும் இவர்கள் வசிக்கும் சூழல் எப்போதும் துர்நாற்றம் வீசுவதாகவே காணப்படுகிறது.

இதனால் பல நோய்களும் இவர்களைத் தாக்குகிறது. அத்தோடு இவர்கள் முன்வைக்கும் முக்கிய பிரச்சினையாக இருப்பது தங்களுடைய பிள்ளைகளின் கல்வி. தாங்கள் கல்வி கற்கவில்லை என்பதற்காகவும் தாங்கள் செய்யும் தொழிலை முன்னிறுத்தியும் பல இடங்களில் தங்களுடைய பிள்ளைகளுக்கான கல்வி மறுக்கப்படுகிறது.

பெரும்பாலும் நகர்ப்புறங்களில் இருக்கும் பெரிய பாடசாலைகளில் தங்களுடைய பிள்ளைகளுக்கான அனுமதி மறுக்கப்படுவதால் அவர்கள் தங்களுடைய கிராமத்திலிருக்கும் சிறிய பாடசாலைகளிலேயே தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். இவர்களுடைய நண்பர்களும் பெற்றோரின் தொழிலை கூறி இழிவாக நடத்தும் செயற்பாடுகளே பல பாடசாலைகளில் இடம்பெறுகின்றன. இதனால் பல மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியும் உள்ளார்கள்.

பாடசாலைக் கல்வி ஒழுங்கான முறையில் கிடைக்காத இவர்கள் பல தீய பழக்கவழக்கங்களை பின்பற்றத் தொடங்குகிறார்கள். குறிப்பாக போதைப் பொருள் பாவனையை இவர்கள் பழக்கப்படுத்திக் கொள்கிறார்கள். பெரும்பாலும் வெளியிடத்திலிருந்து வரும் போதைப்பொருள் விற்பனையாளர்கள் இங்கிருக்கும் சிறுவர்களை போதைப் பொருளை கொண்டு சேர்க்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள். அதற்கான கூலியாக அவர்கள் இச்சிறார்களுக்கு போதைப் பொருளைக் கொடுக்கிறார்கள். எனவே இதற்கு அடிமையாகும் சிறுவர்கள் பயமின்றிக் காலப்போக்கில் போதைப் பொருளை கடத்தத் தொடங்குகிறார்கள்.

பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தியதும் பெண் பிள்ளைகள் பலர் இளவயதிலேயே திருமணம் செய்து கொள்கின்றனர். வாழ்க்கை என்றால் என்ன என்பதை அறியாமலேயே வாழத் தொடங்குகிறார்கள். இவ்வாறு இவர்களாகத் தேர்ந்தெடுக்கும் வாழ்க்கை பல சமயங்களில் பொருத்தமற்றதாகவே போய்விடுகிறது. பல பெண் பிள்ளைகள் குழந்தைகளோடு சீரழிகின்ற நிலை உருவாகியுள்ளது. இவர்களால் தங்களுடைய எதிர்கால வாழ்க்கையை கொண்டு நடாத்த முடியாத நிலையே காணப்படுகிறது.

இவ்வாறு இவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற போதிலும் மக்களுக்கான சேவையை பிழையில்லாமலேயே செய்கின்றனர். அதிகாலையில் எழுந்து தங்களுடைய கடமைகளை முடித்துக் கொண்டு வேலைக்குச் சென்றால் அங்கிருக்கும் மேலதிகாரிகள் எங்களை நடத்தும் விதம் மிகவும் வேதனைக்குரியதாக இருக்கும்.

இவையனைத்தையும் சகித்துக் கொண்டு மக்களுக்கான சேவையை செய்கையில் அவர்கள் காட்டும் நடத்தைகள் ரணத்தைத் தரும். தங்கள் வீட்டுக் குப்பைகளை கூட அவர்களால் கையால் தொட முடியாது. ஆனால் அதே குப்பையை நாங்கள் கையால் தொட்டு தூக்கி அதனைத் தரம் பிரித்துப் போட வேண்டும். இவ்வாறிருக்கையில் வேலைக் களைப்பில் தாகமெடுத்து தண்ணீர் கேட்டால் கூட அதனைத் தருவதற்கே பெரும்பாடு படுவார்கள். நமக்குத் தருவதற்கென சில பாத்திரங்களை வைத்திருப்பார்கள். அந்தப் பாத்திரத்தில் தான் தண்ணீர் தருவார்கள். துப்பரவுத் தொழிலைச் செய்யும் நாங்கள் நிற்கும் கோலம் அலங்கோலமானதாகத் தான் இருக்கும். அதற்காக நாங்கள் சுத்தமற்றவர்கள் என்றில்லை. நாங்கள் போய் வேலை செய்யும் பல வீடுகள் சுத்தமின்றியே காணப்படும். ஆனால் அவர்கள் அதையெல்லாம் பார்க்க மாட்டார்கள். நாங்கள் செய்யும் தொழிலைக் கொண்டு எங்களை மதிப்பிடுவார்கள்.

இவர்களுடைய வீட்டுக் கழிவுகளை எல்லாம் அகற்றி சுத்தம் செய்து வீட்டிற்குச் சென்றால் உண்ணும் உணவில் கூட நாட்டம் இருக்காது. உழைப்பது உண்பதற்காக ஆனால் இவர்களுடைய வாழ்க்கையைப் பொறுத்த மட்டில் அந்த உழைப்பிற்கான பயனைக் கூட இவர்கள் அனுபவிக்க முடியாத நிலையே காணப்படுகிறது.

அடிப்படை வசதிகளே இல்லாமல் இல்லாமல் பெரும் சிரமத்திற்கு மத்தியிலேயே இச் சுத்திகரிப்புத் தொழிலாளிகளின் வாழ்வாதாரம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவர்களின் வாழ்வாதாரம் குறித்து இதுவரையில் எந்தவொரு முன்னேற்ற முயற்சிகளும் எடுக்கப்படவில்லை என்பதே உண்மை.

இவர்கள் மீதான ஒடுக்குமுறையென்பது இன்றும் மறைமுகமாகத் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. எமது சமூகத்தில் பல்வேறுபட்ட தொழில்கள் காணப்படுகின்றன. ஆனால் உயர் பதவிகளையே நாம் நாடித் தேடுகின்றோம். இவ்வாறான சுத்திகரிப்புத் தொழிலைச் செய்து நமது சூழலை அழகாக்கும் தூதர்களை நாம் ஏளனமாகப் பார்க்கின்றோம். ஆனால் அத்தொழிலை நம்மால் செய்ய முடியாது. சுத்திகரிப்புத் தொழிலாளிகளும் சாதாரண மனிதர்கள் தாம் அவர்களை கழிவிரக்கத்திற்குரியவர்களாகப் பார்க்காமல் எங்களுடைய மனித நேயத்தை கொஞ்சம் அவர்களிடமும் காட்டுவோம்.

நெல்லை

# உயிர்களைக் காவு கொல்லும் ரம்மி



நெல்லை மாவட்டம், ஸ்ரீரெகுநாதபுரத்தைச் சேர்ந்தவர் சிவன்ராஜ். 34 வயதான இவர், கடந்த சில மாதங்களாக ‘ஒன்லைனில் ரம்மி விளையாட்டில்‘ ஈடுபட்டு வந்துள்ளார்.

ஆரம்பத்தில் இவ்விளையாட்டின் மூலம் சிறு சிறு தொகைகளை வென்று வந்துள்ள அவர், கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஒரு பெரிய தொகையை வைத்து விளையாடியதாகவும், அதில் தான் வைத்திருந்த மொத்தத் தொகையை இழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் தான் இழந்த பணத்தை எப்படியாவது பெற்றுவிட வேண்டும் என்பதற்காக தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் கடன் வாங்கி மீண்டும் விளையாடியதாகவும்,அதிலும் அவர் தோல்வியுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மொத்தமாக 15 லட்சம் ரூபாயை அவர் ரம்மி விளையாட்டில் இழந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

இதனால் மனஉளைச்சலுக்குள்ளான அவர் நேற்று முன்தினம்(10) தன் உயிரை மாய்த்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



உத்தரப்பிரதேசம்

# 3 மோட்டார் சைக்கிள்களில் 14 பேர்

உத்தரப்பிரதேச மாநிலம், பரேலியில் சிலர் மோட்டார் சைக்கிள்களில் சாகசம் செய்யும் வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.


குறித்த வீடியோவில், மூன்று மோட்டார் சைக்கில்களில் 14 பேர் செல்லும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

அதில் ஒரு மோட்டார் சைக்கிளில் ஆறு பேரும், ஏனைய இரு மோட்டார் சைக்கிள்களில் தலா நான்கு பேரும் என ஆபத்தான முறையில் பயணம் மேற்கொண்டு சாகசத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த 14 பேரையும் கைதுசெய்துள்ள பொலிஸார் அவர்களது மோட்டார் சைக்கிள்களையும் பறிமுதல் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேசம்

# சிறுமிக்குக் காதல் கடிதம் கொடுத்த ஆசிரியர்





உத்தரபிரதேச மாநிலம், கான்பூர் நகரில் உள்ள பாடசாலையொன்றில் 8ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவியொருவருக்கு 47 வயதான ஆசிரியர் ஒருவர் காதல் கடிதம் கொடுத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அக்கடிதத்தில் ” இதனைப் படித்ததும் கிழித்து விட வேண்டும்,யாருக்கும் காட்டக் கூடாது, விடுமுறை நாட்களில் உன்னை மிஸ் செய்வேன் , விடுமுறை வருவதற்குள் என்னை வந்து சந்தித்து விடு” இவ்வாறு எழுதப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அச்சிறுமி இது குறித்து தனது பெற்றோரிடம் தெரிவித்துள்ள நிலையில்,பெ ற்றோர் தனது மகளிடம் மன்னிப்பு கேட்குமாறு கோரியுள்ளனர். எனினும் இதற்கு மறுப்புத் தெரிவித்த ஆசிரியர் சிறுமியை இருக்கும் இடம் தெரியாமல் செய்துவிடுவதாக மிரட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சிறுமியின் பெற்றோர் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமையை அடுத்து, குறித்த ஆசிரியர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




பெங்களூரு

# அப்பிள் உடன் கைகோர்க்கும் டாட்டா

128 பில்லியன் டொலர்கள் மதிப்புடைய டாட்டா குழுமம் ஐ போன் உற்பத்தி செய்ய தாய்வான் விஸ்ட்ரன் கோர்ப்பரேசனுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் ஏப்ரல் மாதம் முதல் டாட்டா நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரில் இருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இத்தொழிற்சாலை 2 .2 மில்லியன் சதுர அடி பரப்புடையது.

> **“ ஐ போன் தயாரிப்பில் முன்னணி வகிக்கும் சீனாவுக்கு இது மிகுந்த சவாலாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது**

இங்கு உள்ள எட்டு தொலைபேசி லைன்களையும் டாட்டா நிறுவனம் கொள்வனவு செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதில் 10,000ஊழியர்கள் டாட்டா குழுமத்தால் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது உள்நாட்டு மின்னணு துறையில் முன்னிலை பெறும் எனவும், இந்தியாவின் இலக்கை எட்ட உதவும் என்றும் டாட்டா நிறுவனத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஐ போன் தயாரிப்பில் முன்னணி வகிக்கும் சீனாவுக்கு இது மிகுந்த சவாலாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# 4ஆவது இடத்தில் ஷாருக்கான் உலகம் முழுவதும் ரசிகர்களைக்



கொண்டவர் நடிகர் ஷாருக்கான். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக திரைத்துறையில் சிறந்து விளங்கிவரும் அவர் இதுவரை 90க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

இந்நிலையில் ‘World of Statistics ‘ என்ற அமைப்பு வெளியிட்டுள்ள உலகின் பணக்கார நடிகர்கள் பட்டியலில் ஷாருக்கான் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளார்.

அவருடைய சொத்து மதிப்பு இந்திய மதிப்பில் 6,306 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவர் ஹொலிவூட் நடிகர்களான டாம் க்ரூஸ், ஜார்ஜி க்ளூனி மற்றும் ஜாக்கி சானையும் பின்னுக்கு தள்ளி முன்னிலை வகிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

# மனைவியின் ஆபாசப் படத்தால் அதிர்ச்சி



பிரித்தானியாவின் அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர் ஹாரி, அமெரிக்க நடிகையும், விவாகரத்து ஆனவருமான மேகன் என்பவரை 2018 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்.

இவர்களது திருமணத்தில் பல்வேறு தடைகள் ஏற்பட்டதாகக் கூறப்பட்ட நிலையில், திருமணத்தின் பின்னர் இருவரும் அமெரிக்காவில் வாழ்க்கையைத் தொடங்கியதால் HRH எனப்படும் அரச பட்டத்தை ஹாரி இழக்க நேரிட்டது.

இந்நிலையில் இளவரசர் ஹாரி அண்மையில், தனது மனைவி மேகன் ஒரு நடிகையாக இருந்தபோது அவர் நடித்த ஆபாசக்காட்சிகளைக் கண்டு அதிர்ச்சியடைந்ததாகத் தெரிவித்துள்ளார்.

ஹாரியும் மேகனும் 'டேட்டிங்' செய்ய தொடங்கியதுமே மேகன் விளம்பரங்களிலும், தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்த காட்சிகளை ஊடகங்கள் வெளியிட்டன.

குறிப்பாக, Suits என்னும் தொலைக்காட்சித் தொடரில் மேகன் நடிக்கும்போது, ஹரி ஷூட்டிங் பார்க்கச் சென்றிருந்தாராம். அப்போது தன் காதலியாக இருந்த மேகனுடன் ஒரு நடிகர் நெருக்கமாக நடிக்கும் காட்சிகளை ஹரி கண்டுள்ளார்.

தன் காதலி வேறொரு நபருடன் நெருக்கமாக இருந்த அந்த ஆபாசக் காட்சிகளைப் பார்த்ததால், அக் காட்சிகளை தன் மனதில் இருந்து அகற்ற, தனக்கு மின்சார ஷொக் சிகிச்சை தேவை என தான் நினைத்ததாக ஹாரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா



## கின்னஸில் இடம் பிடித்த எலோன் மஸ்க்

உலகின் மிகப்பெரும் செல்வந்தரும், டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகருமான எலோன் மஸ்க், டுவிட்டரை அண்மையில் கைப்பற்றியதில் இருந்து பல்வேறு மாற்றங்களைச் செய்து வருகின்றார்.

குறிப்பாக டுவிட்டர் நிறுவனத்தின் முக்கிய பதவிகளில் கடமையாற்றிவரும் ஊழியர்கள் பலரை பணி நீக்கம் செய்த எலோன், ப்ளூ டிக் கட்டண உயர்வு, ஆட்கள் குறைப்பு, வருவாய் இரட்டிப்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்.

இதன்காரணமாக பெரும்பாலான மக்களின் வெறுப்பை அவர் சம்பாதித்து வருகின்றார்.

இந்நிலையில் 'வரலாற்றிலலேயே மிகப்பெரிய சொத்து இழப்பை எதிர்கொண்ட முதல் நபர்' என்ற கின்னஸ் சாதனையை எலோன் மஸ்க் படைத்திருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்தவகையில் கடந்த நவம்பர் 2021ஆம் ஆண்டில் இருந்து தோராயமாக 182 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான சொத்தை மஸ்க் இழந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக எலோன் மஸ்க், தனக்குச் சொந்தமான மின்சார கார் வாகன தயாரிப்பு நிறுவனமான டெஸ்லாவின் மதிப்பில் 11% என்ற அளவில் பங்கு மதிப்பு சரிவைக் கண்டார்.

ஓர் ஆண்டில் மாத்திரம் 11% மதிப்பு வீழ்ச்சி என்பது அவருக்கு கிடைத்த மிகப் பெரும் பொருளாதார வீழ்ச்சி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

## இம்ரான் கான் கைது?




பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கானுக்கு எதிராக அந்நாட்டு தேர்தல் ஆணையம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

பாகிஸ்தான் தலைமை தேர்தல் ஆணையாளரை இம்ரான்கான் அண்மையில் கடுமையாக விமர்சித்திருந்த நிலையில், அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவர் எந்த நேரம் வேண்டுமானாலும் கைது செய்யப்படலாம் எனவும் எதிர்பார்க்க ப்படுகின்றது.

ரஷ்யா

## உதவிக்கரம் நீட்டினாலும் துன்பம்தான்



உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி, உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 11 மாதங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதன்காரணமாக ரஷ்யா மீது அமெரிக்கா, பிரித்தானிய, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் பொருளாதாரத்தடைகளை விதித்தன.

அதேசமயம் ரஷ்யாவின் தாக்குதலை எதிர்கொண்டு பதில் தாக்குதல் நடத்துவதற்கு உக்ரேனுக்கு பல மில்லியன் மதிப்புள்ள இராணுவ உதவிகளையும் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் வழங்கி வருகின்றன.

இந்நிலையில், மேற்கத்திய நாடுகள் உக்ரேனுக்கு ஆயுத உதவி வழங்கி வருகின்ற காரணத்தால் உக்ரேன் மக்களின் துன்பம் மாத்திரமே நீடிக்கும் எனவும் எந்த மாற்றமும் நிகழ்ந்து விடாது எனவும் ரஷ்யா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## தோல்வியில் முடிந்த முதல் பயணம்

பிரித்தானியாவில் இருந்து முதன்முறையாக கடந்த ஒன்பதாம் திகதி ஏவப்பட்ட ரொக்கெட் தோல்வியில் முடிந்தது.

போயிங் 747 விமானத்தில், சுமார் 70 அடி உயர ரொக்கெட்டை பொருத்தி, அதிலிருந்து செயற்கைக்கோள்களை ஏவ, பிரித்தானியா விண்வெளி நிறுவனம் திட்டமிட்டதன்படி, கார்ன்வலில் உள்ள தளத்தில் இருந்து ரொக்கெட்டுடன் விமானம் புறப்பட்டது.

திட்டமிட்டபடி, 35,000 அடி உயரத்தில் விமானத்தில் இருந்து ரொக்கெட் பிரிக்கப்பட்டு விண்ணில் ஏவப்பட்டது. எனினும், புவி வட்டப்பாதையில் ரொக்கெட் திடீரென விலகிச்சென்றதாகவும், இதனால் திட்டம் தோல்வியடைந்ததாகவும் விஞ்ஞானிகள் அறிவித்தனர்.

பாகிஸ்தான்

## கோதுமை மாவுக்காக அடித்துக் கொள்ளும் மக்கள்





கடந்த சில ஆண்டுகளாகப் பாகிஸ்தான் அரசானது கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது.

குறிப்பாக, நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்கம் காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்வடைந்துள்ளதால் அந்நாட்டு மக்கள் அன்றாட வாழ்வில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் பாகிஸ்தானின் முக்கிய உணவான கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக அந்நாட்டு மக்கள் கடுமையான உணவு பற்றாக்குறையை எதிர் கொண்டு வருகின்றனர். கைபர் பன்துன்க்வா, சிந்து, பலுசிஸ்தான் மாகாணங்களின் பல பகுதிகளிலும் கோதுமை மாவை பெற மக்கள் முண்டியடித்து சென்றதால் நெரிசல் ஏற்பட்டது.

**“ மக்கள் கடுமையான உணவு பற்றாக்குறையை எதிர் கொண்டு வருகின்றனர். கைபர் பன்துன்க்வா, சிந்து, பலுசிஸ்தான் மாகாணங்களின் கோதுமை மாவை பெற மக்கள் முண்டியடித்து சென்றதால் நெரிசல் ஏற்பட்டது**

சந்தையில் ஏற்கெனவே பற்றாக்குறையாக இருக்கும் நிலையில், மானிய விலையில் கிடைக்கும் மாவு மூட்டைகளைப் பெற ஆயிரக்கணக்கான பாகிஸ்தானியர்கள் தினமும் மணிக்கணக்கில் வரிசையில் நிற்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், 10 கிலோ கிராம் மாவு பையைப் பெற மக்கள் எவ்வாறு போராடுகிறார்கள் என்பதைக் காட்டும் சில அதிர்ச்சியூட்டும் வீடியோக்கள் இணையத்தில் வெளிவந்துள்ளன.

ஆயுதமேந்திய காவலர்களால் பாதுகாக்கப்பட்ட மினி லொரிகள், வேன்கள் மாவை விநியோகிக்கச் செல்லும் நிலையில், மக்கள் மாவைப் பெற வாகனங்களைச் சுற்றி கூடுவதால் கடும் நெரிசலும் சண்டையும் ஏற்படும் காட்சிகள் அடிக்கடி காணப்படுகின்றன.

பாகிஸ்தான் அரசு மற்றும் பஞ்சாப் அரசாங்கங்களுக்கு இடையிலான மோதல், பாகிஸ்தானில் கோதுமை நெருக்கடிக்கு காரணம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# இலங்கையை வென்ற இந்தியா

இலங்கைக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், கௌஹாத்தியில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இந்தியா: 373/7 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி 113 (87), றோஹித் ஷர்மா 83 (67), ஷுப்மன் கில் 70 (60), லோகேஷ் ராகுல் 39 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: கசுன் ராஜித 3/88, தனஞ்சய டி சில்வா 1/33, சாமிக கருணாரத்ன 1/54, டில்ஷான் மதுஷங்க 1/43, தசுன் ஷானக 1/22)

இலங்கை: 306/8 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: தசுன் ஷானக ஆ.இ 108 (88), பதும் நிஸங்க 72 (80), தனஞ்சய டி சில்வா 47 (40) ஓட்டங்கள். பந்துவீச்சு: உம்ரான் மலிக் 3/57, மொஹமட் சிராஜ் 2/30, ஹர்டிக் பாண்டியா 1/33, யுஸ்வேந்திர சஹால் 1/58, மொஹமட் ஷமி 1/67, அக்ஸர் பட்டேல் 0/58)

போட்டியின் நாயகன்: விராட் கோலி

இந்நிலையில், இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது கொல்கத்தாவில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தியாவுக்கெதிரான தொடருக்கான

## அவுஸ்திரேலிய குழாமில் புதுமுகச் சுழற்பந்துவீச்சாளர்



இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான அவுஸ்திரேலியக் குழாமில், நேதன் லையன், மிற்செல் ஸ்வப்ஸன், அஸ்தன் அகரோடு புதுமுகச் சுழற்பந்துவீச்சாளரான டொட் முர்பியும் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை குழாமில் மிற்செல் ஸ்டார்க் இடம்பெற்றுள்ளபோதும் முதலாவது போட்டியில் விளையாட மாட்டார் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், மற் றென்ஷோ, பீற்றர் ஹன்ட்ஸ்கொம்ப் ஆகியோர் குழாமில் இடம்பெற்றுள்ளதோடு, மார்க்கஸ் ஹரிஸ் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: டேவிட் வோர்னர், உஸ்மான் கவாஜா, மர்னுஸ் லபுஷைன், ஸ்டீவன் ஸ்மித் (உப தலைவர்), ட்ரெவிஸ் ஹெட், மற் றென்ஷோ, பீற்றர் ஹன்ட்ஸ்கொம்ப், அலெக்ஸ் காரி (விக்கெட் காப்பாளர்), கமரொன் கிறீன், அஸ்தன் அகர், நேதன் லையன், மிற்செல் ஸ்வப்ஸன், டொட் முர்பி, பற் கமின்ஸ் (அணித்தலைவர்), மிற்செல் ஸ்டார்க், ஜொஷ் ஹேசில்வூட், ஸ்கொட் போலண்ட், லான்ஸ் மொறிஸ்.



## மியன்டாட் லெஜன்ட் அணி அங்குராப்பணமும்

### புதிய சீருடை அறிமுகமும்

■ நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகத்தின் மற்றுமோர் அங்கமான மியன்டாட் லெஜன்ட் அணி அங்குராப்பணமும், புதிய சீருடை அறிமுகமும், மூன்று போட்டிகள் கொண்ட மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரும் கமு/கமு/லீடர் எம். எச்.எம். அஷ்ரப் வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஆசியக் கிண்ணத் தொடரில்

## இலங்கை பங்கேற்காமைக்கான அபராதம் குறைப்பு


ஆசியக் கிண்ணத் தொடரை தவறவிட்டதனால் இலங்கைக்கு ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தால் விதிக்கப்பட்ட 20,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அபராதமானது, இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் ஜஸ்வர் உமாரின் தலையீட்டினால் 5,000 டொலர்களாக குறைக்கப்பட்டுள்ளது.

ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் செயற்குழு உறுப்பினராக தான் தொடர்ந்து செயற்படுவதன் காரணமாக இந்த நிவாரணம் பெற பெரும் உதவியாக இருந்ததாக ஜஸ்வர் உமர் தெரிவித்தார்.

ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத்திடம் உமர் சமர்ப்பித்த முறையீட்டின் பிரகாரம், ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஒழுக்காற்று குழு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. எஞ்சிய 15,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அபராதத்தை இரண்டு வருடங்களுக்கு ஒத்தி வைக்கவும் தீர்மானித்துள்ளது. இரண்டு வருடங்களுக்குள் இலங்கை கால்பந்து சம்மேளனமானது, கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்கேற்கத் தவறும் பட்சத்தில் இந்த 15,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டி வரும் என்று உமர் கூறுகிறார்.

ஈ.எஃப்.எல் கிண்ணத் தொடர்:

## வெளியேற்றப்பட்ட லெய்செஸ்டர் சிற்றி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான விலகல் முறையிலான இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடரிலிருந்து லெய்செஸ்டர் சிற்றி வெளியேற்றப்பட்டது.

நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான காலிறுதிப் போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் தோற்றே தொடரிலிருந்து லெய்செஸ்டர் வெளியேற்றப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 12 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.